தமிழ்நாடு • மகளிர் மேம்பாட்டு •

முற்றம்

₹ 10/- மலர் 16 இதழ் 09 ஜனவரி 2015 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

தேர்வுகளை எளிதாக எதிர்கொள்ள...

விற்பனைக் கண்காட்சி

நிறைவு விழா

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●
முற்றம்

திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்பு தோழிகளே,

ஒவ்வொரு மாதமும் உங்களை முற்றம் இதழின் வாயிலாக சந்தித்து, என் எண்ணங்களையும், கனவுகளையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இம்முறை குழந்தை வளர்ப்பு பற்றிய என் எண்ணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

குழந்தை வளர்ப்பு என்பது தாயாக இருக்கும் ஒவ்வொரு பெண்ணும் கவனத்துடன் செய்ய வேண்டிய ஒரு முக்கியமான பணி. வேகம் வேகம் என்று ஓடிக் கொண்டு இருக்கும் இந்த இளைய சமுதாயத்தினரை நல்வழிப்படுத்த, சில குறிப்புகளை சொல்லப் போகிறேன். இவை ஆண் பெண் குழந்தைகள் அனைவருக்கும் பொருந்தும். நாட்டின் எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் இந்த பணியில் தாயாக கவனிக்க வேண்டிய முத்தான விதிகள் பத்து இதோ உங்களின் பார்வைக்கு...

- இல்லை ஒரு பிள்ளை என்று ஏங்குவோர் பலர் இருக்க இங்கு வந்து ஏன் பிறந்தாய் என்று புலம்ப வேண்டாம். ஒவ்வொரு குழந்தையும் ஒரு பொக்கிஷம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.
- குழந்தைகள், வீட்டின் முகவரி, பெற்றோரின் தொலைபேசி எண்கள் ஆகியவற்றை அறிந்து இருக்க வேண்டும்.
- வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால், ஒருபோதும் ஒருவருடன் மற்றவரை ஒப்பிட்டு பேசாதீர்கள்.
- குழந்தைகளிடம் தினம் நேரம் செலவிடுங்கள். ஒரு தோழமையுடன் அவர்கள் சொல்வதை காது கொடுத்துக் கேளுங்கள். ஒருபோதும் 'ச்சீ வாயை மூடு', 'தொணதொண என்று கேள்வி கேட்காதே' என்று அவர்களிடம் எரிச்சல் காட்டி, அவர்களின் ஆர்வத்தை குழி தோண்டி புதைத்து விடாதீர்கள்.
- மேலாடையின்றியோ, ஆடையே இன்றியோ குழந்தைகள் உங்களுக்கு குழந்தையாய் தெரியலாம். எல்லோருக்கும் அப்படியே தெரியும் என்று எண்ணி விடாதீர்கள். யார் அழைத்தால் போக வேண்டும், யார் கொடுத்தால் வாங்க வேண்டும் என்று குழந்தைகளுக்குத் தெளிவுபடுத்துங்கள். அது அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும்.
- பள்ளிக்கு ஏதோ ஒரு வாகனத்தில் தனியாகவோ, பிற குழந்தைகளுடனோ அனுப்பினால், அந்த வாகன ஓட்டுனரின் முழு விவரத்தையும் தெரிந்து கொள்ளுங்கள், அவர் வீட்டு முகவரி உட்பட வாகன ஓட்டுனரின் நடத்தையிலும், பழக்க வழக்கத்திலும் ஐயமின்றி தெளிவுறுங்கள்.
- ஒரு கட்டத்திற்கு மேல், உங்கள் விருப்பங்களை குழந்தையின் மேல் திணிக்காதீர்கள். ஒருமுறை நீர் ஊற்றியவுடன் விதை மரமாகி விடாது. நீங்கள் ஒருமுறை சொன்னவுடன் குழந்தைகள் உங்கள் விருப்பப்படி மாறிவிட மாட்டார்கள். உங்களுக்குப் பொறுமை அவசியம். தவறுகளை தன்மையுடன் திருத்துங்கள், தண்டிக்க நினைக்காதீர்கள்.
- படிப்பு என்பது அடிப்படை. அதையும் தாண்டி குழந்தைகளுக்கு உள்ள மற்ற ஆர்வத்தையும் ஊக்குவிங்கள். ஓடி ஆடி விளையாடுவது குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு அவசியம். விளையாட்டிற்குத் தடை போடாதீர்கள்.
- ஒருபோதும் உங்கள் குழந்தைகளின் எதிரே சண்டை இடாதீர்கள். அவர்கள் உங்கள் கோபதாபங்களின் வடிகால்கள் அல்ல.
- உங்கள் பெற்றோரை நீங்கள் நடத்தும் விதம் உங்கள் பிள்ளைகளால் கவனிக்கப்படுகிறது. நாளை உங்களுக்கு அதுவே நடக்கலாம். எனவே வீட்டில் இருக்கும் வயது வந்தவர்களை மரியாதையுடன் நடத்தி, அவர்களுக்கு ஒரு நல்ல முன் மாதிரியாக விளங்க முயற்சி செய்யுங்கள்.

குழந்தைகளை பொறுப்பான மனிதர்களாக உருவாக்க வேண்டியது நம் கடமை. ஆனால் அதையும் தாண்டி, மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக இருக்கும் நான் இதை சொல்லாமல் இருக்க முடியுமா?

ஆண் குழந்தையையும், பெண் குழந்தையையும் சமமாக நடத்துவோம் என்று இந்நாளில் உறுதி ஏற்போம்.

என்றும் அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

சிறுகதை **தன் வினை தன்னைச் சுடும்...**

இயற்கை எழில் நிறைந்த குற்றாலம்	4
வேண்டாம் குழந்தைத் திருமணம்	8
தேர்வுகளை எளிதாக எதிர்கொள்ள...	12
பூக்கள் – நாடகம்	20
சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்	22
மின்னணு சேவை மையம்	30
கால்நடைகளுக்கு இயற்கை வைத்தியம்	32

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளையும், சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளையும் மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றம் இதழ் எங்களைப் போன்ற சுய உதவிக் குழுவினர்களுக்கு ஊக்கத்தையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தி வருகின்றன.

மீனாட்சி ராமச்சந்திரன்,
அன்னை மகளிர் சுய உதவிக் குழு,
சோளிங்கர், வேலூர் மாவட்டம்.

முற்றம் இதழின் வாயிலாக பயனுள்ள பல தகவல்களைப் பெற முடிகிறது. உழவர் மன்றம் மற்றும் சுய உதவிக் குழுக்களின் குறைதீர்க்கும் முகாம் குறித்த விபரங்கள் மாவட்ட செய்திகள் என பல்வேறு விபரங்களை அறிந்து கொள்ள முடிகிறது. முற்றம் இதழ் வடிவமைப்பிற்கு வாழ்த்துக்களும் பாராட்டுகளும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜெ. பொன்னரசு (பிரதிநிதி)
அண்ணா மறுமலர்ச்சி ஆண்கள் குழு,
தலகாஞ்சேரி, திருவள்ளூர் மாவட்டம்.

புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் போன்றவற்றின் செயல்பாடுகளால் கிராமப்புறங்களில் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் வளர்ச்சி பெற்று வருகிறது என்பதை முற்றம் இதழின் இடம் பெறும் செய்திகள் மூலம் நாங்கள் அறிந்து கொள்கிறோம்.

லட்சுமி பாலசுப்பிரமணி,
விடிவெள்ளி மகளிர் குழு,
உமையாள்புரம், தஞ்சாவூர் மாவட்டம்.

சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளால், சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்து வருகிறது. அப்பகுதி மக்களின் செயல்பாடுகள் எங்களுக்கு தன்னம்பிக்கையும், உற்சாகத்தையும் தரும் வகையில் முற்றம் இதழ் வெளியிடுகிறது.

கிருத்திகா விஷ்ணு,
நட்சத்திரம் மகளிர் சுய உதவிக் குழு,
தரங்கம்பாடி, நாகை மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
மலர் 16 இதழ் 09 ஜனவரி 2015
விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்
வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
டி. ஆர். வேதநாயகம்
கூடுதல் இயக்குநர்
எம். மாதவி
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
எல். ராஜா
கூடுதல் திட்ட இயக்குநர்
ஆர். ராஜசேகர்
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
ப. கலைமதி
மக்கள் தொடர்பு அலுவலர்

முற்றம் உதவியாளர்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு (ஒப்பந்தம்)
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.
தொலைபேசி: 044-2817 3412 / 3413
தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

இலட்சிய கனவு தேவை...!

அன்புள்ள வாசகர்களுக்கு,

அனைவருக்கும், குறிப்பாக விவசாயிகளுக்கு வழி பிறக்கும் மாதமாகக் கருதப்படும் தை மாதம் பிறந்து, தமிழர்களின் தனித் திருநாளாம் பொங்கல் திருநாளும் முடிந்தது. 'வாடிய பயிர்களைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று விவசாயப் பெருமக்களின் மாண்பைக் கூறிய அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் இராமலிங்க அடிகளாரின் சிறப்பு பூசையும், தைப்பூசமும் முடிந்தது. உழைப்பினால் விளைந்த பயிர்களின் அறுவடை தொடங்கி நடந்து கொண்டிருக்கின்ற மாதம் இது.

விதை விதைத்து, நீர் பாய்ச்சி, களையெடுத்து, உரமிட்டு, மருந்து தெளித்து பாதுகாத்து விவசாயத்தின் பலனைக் காண்பதற்கு, அறுவடை நாட்களை எதிர்நோக்கி ஆவலாக காத்திருக்கும் விவசாயிகள் போன்று, குழந்தையை ஈன்றெடுத்து, பேணி பாதுகாத்து, உணவு, உடை மற்றும் கல்வியையும் கொடுத்து, பிள்ளைகளின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் தேர்வான, வரப்போகும் பள்ளி இறுதித் தேர்வை நோக்கி பெற்றோர்கள் ஏக்கத்துடன் எதிர்நோக்கும் மாதம் இது. அதோடு மாணவர்களும் தீவிரமாகத் தேர்வுக்கு தயார் செய்யும் மாதமும் இந்த பிப்ரவரி மாதமே.

தங்கள் பிள்ளைகளின் எதிர்கால வளர்ச்சிக்கு, அவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்ய தியாகங்கள் பல செய்து, பிள்ளைகளின் இறுதித் தேர்வை நம்பிக்கையோடு எதிர்நோக்கி இருக்கும் பெற்றோர்களின் கனவை விட, அந்த பிள்ளைகள் அவர்களது எதிர்காலத்தைப் பற்றி கனவு காணச் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

பலரும் அவ்வப்போது வலியுறுத்துவது போன்று, பள்ளிக் கல்வியின் இறுதி தேர்வுகளின் முடிவுகள்தான் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கான அடிப்படையாகும். வலுவான, ஆழமான அடிப்படைதான் உயர்வடைவதற்கு வழிகோலும். தேர்வுக்கு பிள்ளைகளைத் தயார் செய்யும் இந்த கால கட்டத்தில், அவர்களுக்குப் படிப்பதற்கேற்ற சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

தொலைக்காட்சியினைப் பார்ப்பதை குடும்பமே தவிர்க்க வேண்டும். குடும்ப விழாக்கள், விருந்தினர்கள் வருகை போன்றவற்றை தள்ளி வைக்க வேண்டும். சத்தான உணவை பிள்ளைகளுக்கு உரிய நேரத்திற்குக் கொடுக்க வேண்டும். இதுவே பெற்றோர்கள் குடும்பத்தில் செய்ய வேண்டிய கடமையாகும்.

புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு நாளை அனுசரிக்கும் மாதம் இதுவாகும். புகையிலை மற்றும் பிளாஸ்டிக் போன்ற பொருட்களை உபயோகிப்பதாலும், இரசாயனம் கலந்த உணவு வகைகளை உண்பதாலும், புற்றுநோய் நாளுக்கு நாள் அதிகமாகப் பரவி வருகிறது.

கருவாக வயிற்றில் சுமந்து, குழந்தையாகப் பெற்றெடுத்து, அதை பாலூட்டி சீராட்டி வளர்த்தெடுக்கும் பெண்களின் உடல் நலத்திற்கு கூடுதல் கவனமும், விழிப்புணர்வும் அவசியம் என்பதனைப் புரிந்து, குடும்பத்தினர் அனைவரும் உடல் நலம் காக்கும் செயலில் ஈடுபட வேண்டும்.

தேர்வில் தங்கள் பிள்ளைகள் வெற்றி பெற முற்றம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தினம்... தினம்...

பெண்கள் இதய நல தினம் (பிப்ரவரி 1)

இதய நோய் குறித்து பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதே பெண்கள் இதய நல தினத்தின் (Women's Heart Health Day) முக்கிய நோக்கமாக உள்ளது. இதய நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்ட பிறகு இந்த எண்ணிக்கை கணிசமாக குறைந்து வருகிறது என்பது மகிழ்ச்சியான செய்தியாக இருக்கிறது. மார்பகப் புற்றுநோயை விட இதய நோய் பல மடங்கு அதிகமாகப் பெண்களை பாதித்து வருகிறது.

இதய நல தினத்தில் இதய நோய் பற்றிய அறிவியல் பூர்வமான தகவல்கள் மற்றும் இதய நோய் பாதிப்பு வராமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி பெண்களுக்கு எடுத்து கூறப்படுகிறது. நீரிழிவு நோய், உடல் பருமன் போன்றவற்றை கட்டுப்படுத்தினால் இதயநோய் குறைய வாய்ப்புள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. ■

புற்றுநோய் விழிப்புணர்வு தினம் (பிப்ரவரி 4)

அ மைதியாகக் கொல்லும் கொடிய நோய்களில் ஒன்றான புற்றுநோயினைப் பற்றி அறிந்து கொண்டு முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஆண்டுதோறும் பிப்ரவரி 4ஆம் தேதி ‘உலகப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம்’ (World Cancer Day) அனுசரிக்கப்பட்டு வருகிறது.

பீடி, சிகரெட், புகையிலை போன்றவற்றை உபயோகிக்கும் பழக்கமும், சுற்றுச்சூழல் மாசும் புற்றுநோய் ஏற்படக் காரணமாக உள்ளன. பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதால் ஏற்படும் புகையை சுவாசிப்பதாலும் புற்றுநோய் உருவாகும் ஆபத்து உள்ளது. புற்று நோய் செல்கள், உடலில் ஒரு பகுதியில் உருவாகி உடலின் மற்ற செல்களையும் அழித்து உடலை செயல்பட விடாமல் தடுத்து விடுகிறது.

இந்தியாவில் ஏற்படும் புற்று நோய்கள் பெரும்பாலும் வாய், தொண்டைப் பகுதியில் வருகின்றன. மார்பகம் மற்றும் கர்ப்பப் பை போன்ற பகுதிகளில் பெண்களுக்கு புற்றுநோய் ஏற்படுவதும் அதிக அளவில் உள்ளன. உலக அளவில் புற்று நோய் பாதிப்பால் மரணம் அடையும் பெண்களில் அதிக விழுக்காட்டினர் மார்பகப் புற்றுநோயால் இறக்கிறார்கள் என உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ■

கொடிய நோய்களில் ஒன்றான புற்றுநோய் குறித்த விழிப்புணர்வினை அனைவரும் பெற வேண்டும்.

சாரணர் தினம் (பிப்ரவரி 22)

சாரணர் இயக்கம் உலகளவில் செயல்படும் ஓர் இளைஞர் இயக்கமாகும். வாய்மை, நேர்மை, நம்பகத்தன்மை, தேசப்பற்று, நேசம், ஜீவகாருண்யம், மரியாதை. தைரியம் போன்ற ஆளுமை அம்சங்களைக் கொண்ட மனித நேயப்பண்புகளுடன் சேவைகள் மூலம் சமூகத்துடன் ஒன்றிணைந்த அமைப்பாக மிளிரும், ‘எதற்கும் தயாராக இரு’ எனும் தொனிப் பொருளைக் கொண்ட சாரணிய இயக்கத்தை உருவாக்கிய பிதாவாகக் கருதப்படும் பேடன் பவல், 1857 பிப்ரவரி 22ம் தேதி பிறந்தார்.

இளம் வயதில் பிரிட்டன் இராணுவத்தில் இணைந்து கொண்ட பேடன் பவுல், இந்தியா, கனடா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் பணியாற்றினார். தென்னாப்பிரிக்காவில் பணியாற்றும் போது, 1907ஆம் ஆண்டில் 22 இளைஞர்களுடன் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தார். 1910ல் சாரணியம் உலகெங்கும் பரவத் தொடங்கியது. தற்போது உலகின் பெரும்பாலான நாடுகளில் சாரணர் சங்கங்கள் செயல்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையில் செயல்படும் தொண்டு நிறுவனமாக சாரணர் அமைப்பு விளங்குகின்றது. இன்று சாரணியர் இயக்கமும், பெண்கள் சாரணிய இயக்கமும் சமுதாயவளர்ச்சிக்காகப்பாடுபடுகின்றன. இவை எதிர்காலச் சமூகத்திற்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகின்றன. ■

ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் வரை தண்ணீர் ஆர்ப்பரித்துக் பாயும் இந்த அருவிக்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

இயற்கை எழில்

நிறைந்த குற்றாலம்...

குற்றால அருவி என்றவுடன் நினைவுக்கு வருவது எண்ணெய் குளியல், குளிர்ச்சியான வானிலை, மேற்குத் தொடர்ச்சி மலையில் ஆர்ப்பரித்துக் கொட்டும் தண்ணீர். இதையெல்லாம் எப்போது அனுபவிப்பது என்று ஏங்கிக் கொண்டிருப்போர் பலர். அப்படிப்பட்ட குற்றால அருவியைப் பற்றி இம்மாதம் தெரிந்து கொள்ளலாம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசிக்கு மிக அருகில் அமைந்துள்ள குற்றால அருவியில் குளிக்கும் சுகமே தனி. குற்றால அருவிகளில் விழும் தண்ணீர் பல மூலிகைச் செடிகளை தழுவி வந்து பாய்வதால் இந்த அருவி மிகவும் சிறப்பு வாய்ந்தது.

பேரருவி

குற்றாலத்தின் மிக முக்கியமான அருவி பேரருவியாகும். செங்குத்தான பாறையில் இருந்து விழும் இந்த அருவி நீரில் குளிப்பதற்கு மிகவும் இதமாக இருக்கும். பல நேரங்களில் இந்த அருவியில் அதிக அளவு தண்ணீர் விழும். அந்த சமயங்களில் இந்த அருவியில் குளிப்பதற்கு தடை விதிக்கப்படும்.

சிற்றருவி

பேரருவிக்கு மேல் இருக்கும் இந்த அருவியில் இருந்து தான் பேரருவிக்கு தண்ணீர் வருகிறது. பேரருவி போன்ற அமைப்புடனே இந்த அருவி அமைந்துள்ளது.

செண்பகாதேவி அருவி

பேரருவிக்கு மேல் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் இயற்கை எழில் நிறைந்த வனத்தின் நடுவே அமைந்துள்ள இந்த அருவிக்கு நடந்துதான் செல்ல வேண்டும். இந்த அருவிக்கு அருகில் இருக்கும் செண்பகாதேவி அம்மன் கோவிலில் சித்திரா பௌர்ணமி நாளில் திருவிழா நடைபெறும்.

தேனருவி

செண்பகாதேவி அருவிக்கு மேலே இந்த அருவி உள்ளது. தேன்கூடுகள் நிறைய இருக்கும் பகுதியில் இருப்பதால் இந்த அருவிக்கு தேனருவி என்று பெயர். மிகவும் அபாயகரமான பகுதியில் இருப்பதால் இந்த அருவிக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐந்தருவி

பேரருவியில் இருந்து ஐந்து கி.மீ. தொலைவில் இந்த அருவி அமைந்துள்ளது. திரிகூட மலையில் தோன்றி சிற்றாற்றின் வழியே பாயும் இந்த அருவி பாறையில் இருந்து விழும் இடத்தில் ஐந்து கிளைகளாக பிரிந்து பாய்கிறது.

பழத் தோட்ட அருவி, புலியருவி, பாலருவி

பழத்தோட்ட அருவி மற்றும் புலி அருவி ஆகிய இரண்டு அருவிகளும் பேரருவி போல் பிரமாண்டமாய் இல்லாததால் மக்கள் கூட்டமும் இந்த



சிறப்பு மிகுந்த

குற்றாலத்திற்கு திருநெல்வேலி, தென்காசி மற்றும் பல இடங்களில் இருந்தும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. குற்றாலத்திலேயே தங்கும் விடுதிகளும் உள்ளன.

அருவிகளில் குறைவாக இருக்கும். எனவே பல மணி நேரம் சுதந்திரமாய் இந்த அருவிகளில் குளிக்கலாம். பாலருவியில் குளிக்க தடை உள்ளது.

பழைய குற்றால அருவி

பேரருவியில் இருந்து 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பழைய குற்றால அருவியிலும் தண்ணீர் மிக உயரத்தில் இருந்து கொட்டுகிறது. கிட்டத்தட்ட பேரருவி போலவே இந்த அருவியும் உள்ளது.

சீசன் நேரங்களில் எந்நேரமும் அருவிகளில் தண்ணீர் விழுவதால், இரவு 12 மணிக்குக் கூட அருவிகளில் குளிக்க மக்கள் தயங்குவதில்லை. நீங்களும் ஒருமுறை குற்றாலம் போய் வாருங்களேன். ■

கிடாரிக் கன்றுகள் பராமரிப்பு...

12 முதல் 18 மாதங்கள் ஆகியும் சரியான உடல் வளர்ச்சி இல்லை என்றாலோ, பருவத்திற்கு வரவில்லை என்றாலோ, கால்நடை உதவி மருத்துவரை அணுகி உரிய சிகிச்சை தர வேண்டும்.

அன்புள்ள முற்றம் வாசகர்களே!

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை, அதிலும் குறிப்பாக மாட்டுப் பொங்கலை மிகச் சிறப்பாக கொண்டாடி இருப்பீர்கள். இனி வருங்காலங்களில் ஒரு வருட வயது முடிந்த கன்றுகளை (இதனை கிடாரி என கூறலாம்) எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதை தெரிந்து கொண்டு, அதன்படி கிடாரி கன்றுகளை வளர்த்தால் கிடாரி தாய்மை அடைந்து தாய்மையின் முத்தாப்பாய் கன்று ஈன்று வீட்டில் செல்வம் செழிக்கும் என்பது திண்ணம்.

சாதாரணமாக 15லிருந்து 18 மாதத்திற்குள் கலப்பின கிடாரியின் உடல் எடை 200லிருந்து 250 கிலோ இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு நல்ல உணவு மற்றும் பராமரிப்பு அவசியம். இதன் இடைப்பட்ட காலத்தில் கிடாரிகள் பருவத்திற்கு வருவதை கூர்ந்து கவனிக்க வேண்டும்.

12 முதல் 18 மாதங்கள் ஆகியும் சரியான உடல் வளர்ச்சி இல்லை என்றாலோ, பருவத்திற்கு வரவில்லை என்றாலோ, அருகில் உள்ள கால்நடை உதவி மருத்துவரை அணுகி உரிய சிகிச்சை தர வேண்டும். கிடாரி பருவத்திற்கு வந்ததன் அடையாளமாக அதன் பிறப்புறுப்பில் இருந்து எண்ணை போன்ற திரவம் வடியும். இவ்வாறு பருவத்திற்கு வந்த கிடாரிகளுக்கு பருவம் வந்த 24 மணிக்குள் சினை ஊசி போடுவது சிறந்தது.

மூன்று முறை சினை ஊசி போட்டும் கருத்தரிக்கவில்லை என்றால், கருத்தரிப்பதற்கான சிறப்பு மருத்துவத்தினை அளிக்க வேண்டும். இதனை அனைத்து கால்நடை மருத்துவமனைகளைலும் இலவசமாகப் பெறலாம்.

சினை ஊசி போட்ட 45 முதல் 60 நாட்களுக்கும் கால்நடை மருத்துவரிடம் கிடாரியை காட்டி சினை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

கருத்தரித்த கிடாரிகளின் உடலில், கன்று வீசுதல் நோய் மற்றும் காச நோய்களுக்கான நோய் கிருமிகள் உள்ளனவா என்பதை அறிய இரத்த பரிசோதனை செய்து, அதற்குண்டான சிகிச்சைகளை அளிக்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும்.

கருவுற்ற மாட்டிலிருந்து, நோயற்ற நல்ல வளர்ச்சி உள்ள சிறந்த திடகாத்திரமான கன்றுகளைப் பெறும் முறையை அடுத்த இதழில் பார்ப்போமா...? ■

டாக்டர் பி. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
சென்னை.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின்

கிறிஸ்துமஸ் – புத்தாண்டு – பொங்கல் விற்பனைக் கண்காட்சி நிறைவு விழா

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மகளிர் மேம்பாட்டிற்காக அரசு தீட்டும் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. அனைத்து மாவட்டத்திலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், புதுவாழ்வுத் திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றின் மூலம், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மகளிரை ஒன்றிணைத்து சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகள் வழங்கி, வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருவதுடன் சுய தொழில் மேற்கொள்ள ஏதுவாக வங்கிக் கடனும் பெற்றுத் தரப்படுகிறது. சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்திடச் செய்யும் வண்ணம், கிராம அங்காடிகள், கல்லூரிச் சந்தைகள் மற்றும் விற்பனைக் கண்காட்சிகள் போன்றவை தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

அதன் ஒருபகுதியாக, சென்னை நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் மகளிர் மேளா ‘கிறிஸ்துமஸ் – புத்தாண்டு – பொங்கல் விற்பனைக் கண்காட்சி’ 19.12.2014 முதல் 11.01.2015 வரை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இக்கண்காட்சியில்தமிழகத்தின்32மாவட்டங்களிலும்செயல்படும் மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம், சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் குழுக்களைச் சேர்ந்த 116 குழுக்கள் 58 அரங்குகளை அமைத்திருந்தனர். 19.12.2014 முதல் 11.01.2014 வரை நடைபெற்ற இக்கண்காட்சியில் சுய உதவிக் குழுவினர் தயாரித்த பொருட்கள் 56.68 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியில் சிறப்பாக அரங்குகள் அமைத்து, அதிக அளவில் பொருட்களை விற்பனை செய்த மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பாராட்டி, அவர்களுக்கு பரிசளிக்கும் விழா 12.01.2015 திங்கட்கிழமை அன்று சென்னை நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சுய உதவிக் குழுக்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார்கள். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி. எம். மாதவி, பொது மேலாளர் திருமதி. டபிள்யூ. சிராஜுன்னிசா, மக்கள் தொடர்பு

அலுவலர் திருமதி. ப. கலைமதி, சென்னை மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திருமதி. சிநேகலதா, மகளிர் திட்ட அலுவலர்கள், மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்தின் பணியாளர்கள், அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் மேலாளர்கள் உள்பட பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இந்தக் கண்காட்சியில் விற்பனை அரங்குகள் அமைத்து அதிக வாடிக்கையாளர்களை ஈர்த்தமைக்காகவும், சிறப்பான முறையில் விற்பனை செய்தமைக்காகவும் நீலகிரி மாவட்டம், குன்னூர் மதர் தெரசா மகளிர் சுய உதவிக் குழுவிற்கு முதல் பரிசும், தூத்துக்குடி மாவட்டம், வெள்ளப்பட்டி சரோஜினி மகளிர் சுய உதவிக் குழுவிற்கு இரண்டாம் பரிசும் வழங்கப்பட்டது.

அதேபோல் சுய உதவிக் குழு மகளிர் உற்பத்திப் பொருட்களை அதிக அளவில் விற்பனை செய்த, திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு அஞ்சலி சுய உதவிக் குழு முதல் பரிசையும், சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி சின்னையாபுரம் சுய உதவிக் குழு இரண்டாம் பரிசினையும் பெற்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்திடச் செய்யும் வண்ணம், கிராம அங்காடிகள், காலேஜ் பஜார் மற்றும் விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

மேலும் இக்கண்காட்சியில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சிறப்பான முறையில் சந்தைப்படுத்திய திருநெல்வேலி மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்திற்கும், திருநெல்வேலி செங்கத்தான் பாறை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினையும் பாராட்டி சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இக்கண்காட்சியில் அரங்குகள் அமைத்து, தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்த மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள், தங்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் நடவடிக்கைகளுக்கும் மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம், மற்றும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் போன்றவை மிக்க உறுதுணையாக உள்ளதாகவும், தங்களுக்கு தன்னம்பிக்கையும், விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளதாகவும் மகிழ்ச்சியுடன் கூறினர். ■

குற்றத்தின் தன்மையைப் பொறுத்து தண்டனையில் ஒன்றோ அல்லது இரண்டுமோ சேர்த்து வழங்கப்படும்.

வேண்டாம்

குழந்தைத் திருமணம்...

நாட்டில் நிலவும் சமுதாயப் பிரச்சனைகளில் மிக முக்கியமான ஒன்றாக குழந்தைத் திருமணங்கள் உள்ளன. குழந்தைத் திருமணங்களினால் ஏற்படும் விளைவுகள் மற்றும் தீமைகள் குறித்து கடந்த இதழில் அறிந்து கொண்டோம். இந்த இதழில் குழந்தைத் திருமணத்தை தடுக்கவும், அதற்காக இயற்றப்பட்ட சட்டங்கள் குறித்தும், தண்டனைகள் குறித்தும், குழந்தைத் திருமணங்களைத் தவிர்ப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் அறிந்து கொள்ளலாம்.



குழந்தைத் திருமணங்களைத் தடுக்க அரசு இயற்றியுள்ள பல்வேறு சட்டங்களில் சிலவற்றை கீழே காணலாம்.

குழந்தை திருமண தடைச் சட்டம் – 2006

2006ஆம் ஆண்டில் குழந்தைத் திருமணத்தை தடை செய்தும், குழந்தைத் திருமணத்தை ஆதரிப்போருக்கும், துணைபுரிவோருக்கும் வழங்கப்படும் தண்டனைகளை கடுமையாக்கியும் ‘குழந்தைத் திருமண தடைச் சட்டம் (2006)’ இயற்றப்பட்டு, நவம்பர் 2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் தமிழ்நாடு குழந்தைத் திருமண தடைச்சட்டம் 2009 வகுக்கப்பட்டுள்ளது.

குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006ன்படி குற்றம் செய்தவராகக் கருதப்படுவோர் யாவர்?

குழந்தை திருமணத்தை நடத்திய இருதரப்பு பெற்றோர் (அ) பாதுகாவலர்கள் மற்றும் மணமகன்; குழந்தை திருமணத்தை நடத்தி வைக்கும் புரோகிதர் / பூசாரி; குழந்தைத் திருமணத்தில் கலந்து கொண்ட உறவினர்கள் / நண்பர்கள் / அண்டை வீட்டார் அனைவரும்; குழந்தைத் திருமணத்தை முன்னின்று நடத்தும் சமுதாய தலைவர்கள்; குழந்தை திருமணத்தை நிச்சயித்த நபர்கள் / அமைப்புகள்; திருமணத் தரகர்கள்; திருமண விழா சமையலர் மற்றும் பணியாளர்கள் ஆகிய அனைவரும் குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006ன்படி குற்றம் செய்தவர்களாகக் கருதப்படுவார்கள்.

குழந்தை திருமணத்தில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள்

குழந்தை திருமண தடைச் சட்டம் 2006ன் கீழ் குற்றம் புரிந்தவர்களுக்கு 2 ஆண்டு பிணையில் விடுவிக்க இயலாத கடுங்காவல் தண்டனை (அ) ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

குற்றத்தின் தன்மையைப் பொறுத்து தண்டனையில் ஒன்றோ அல்லது இரண்டுமோ சேர்த்து வழங்கப்படும். குழந்தைத் திருமணம் ரத்து செய்யப்பட்டு சட்டப்படி செல்லுபடி ஆகாது என அறிவிக்கப்படும்.

பெண் கல்வி கற்றவளாகின்றாள்; பெண்ணின் உடல் மற்றும் மன வளர்ச்சி முழுமையடைதல்; தாய் மற்றும் குழந்தை உடல் நலம் பேணப்படும்; பெண்களுக்கு சுயமாக சிந்தித்து செயல்படும் ஆற்றல் ஏற்படும்; ஆணுக்கு சமமாக பெண்ணும் வேலைக்கு செல்வதால் பொருளாதார தற்சார்பு நிலை ஏற்படும்; அளவான, ஆரோக்கியம் மிகுந்த, மகிழ்ச்சி நிறைந்த குடும்பம் அமைக்கும் மனப்பக்குவம் ஏற்படும்.

குழந்தை திருமணம் குறித்து யாரிடம் புகார் அளிக்கலாம்?

உங்கள் பகுதியில் குழந்தைத் திருமணம் நடைபெறுவதற்கு முன்னரோ (அ) நடை பெற்ற பின்னரோ யார் வேண்டுமானாலும் கீழ்க்கண்ட அதிகாரிகளிடம் புகார் அளிக்கலாம்.

பஞ்சாயத்து தலைவர், கிராம நிர்வாக அலுவலர், பள்ளித் தலைமை ஆசிரியர், காவல் துறையினர், குழந்தை திருமண தடுப்பு அலுவலர் (மாவட்ட சமூக நல அலுவலர்), முதல் வகுப்பு நீதிபதி (அ) பெருநகர் நீதிபதி, மாவட்ட நீதிபதி குழந்தைகள் நல குழும உறுப்பினர்கள் ஆகியோரிடம் புகார் அளிக்கலாம்.

இளம் வயது திருமணத்தை தவிர்ப்பதால் உண்டாகும் நன்மைகள்

பெண் கல்வி கற்றவளாகின்றாள்; பெண்ணின் உடல் மற்றும் மன வளர்ச்சி முழுமையடைதல்; தாய் மற்றும் குழந்தை உடல் நலம் பேணப்படும்; பெண்களுக்கு சுயமாக சிந்தித்து செயல்படும் ஆற்றல் ஏற்படும்; ஆணுக்கு சமமாக பெண்ணும் வேலைக்கு செல்வதால் பெண்களுக்கு பொருளாதார தற்சார்பு நிலை ஏற்படும்; அளவான, ஆரோக்கியம் மிகுந்த, மகிழ்ச்சி நிறைந்த குடும்பம் அமைக்கும் மனப்பக்குவம் போன்றவை ஏற்படும்.

மேலும் குழந்தைத் தொழிலாளர் முறை, கொலை, தற்கொலை போன்றவை குறையும். இளம் வயதில் விதவை ஆனவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஆனாதை சிறார்கள் போன்றவர்களின் எண்ணிக்கையும் குறைவதுடன், வீட்டின் மற்றும் நாட்டின் கல்வியறிவு, பொருளாதாரம் போன்றவை முன்னேற்றமடையும்.

குழந்தைத் திருமணத்தைத் தவிர்க்க மேற்கொள்ள வேண்டிய பணிகள்

பெண் குழந்தைகளை மேல்நிலைப் படிப்புக்கு ஊக்கப்படுத்தி அனுப்ப வேண்டும்;

வரதட்சணை ஒழிப்பு மற்றும் குழந்தைத் திருமணத் தடுப்பு போன்றவை தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்;

அனைத்து திருமணங்களும் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும். திருமணப் பதிவு முறை எளிமையாக்கப்பட வேண்டும்;

பெண்களுக்கு சொத்தில் சமபங்கு அளித்தல் வேண்டும்;

ஆணிற்கு நிகரான மதிப்பும், மரியாதையும் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும். ■

(தொடரும்)

சிறுகதை

தன் வினை தன்னைச் சுடும்...

பூனைக்குட்டி ஒன்றும் குருவிக் குஞ்சு ஒன்றும் ஒன்றாக வளர்ந்தன. நட்புடன் இருந்தன. அவை விளையாட்டாகச் சண்டை போட்டுக் கொள்ளும். பிறகு கூடிக் கொள்ளும். இரண்டிற்கும் இடையே பகை ஏற்பட்டதே இல்லை. இப்படியே சில ஆண்டுகள் சென்றன. பூனைக் குட்டி வலிமையுள்ள பெரிய பூனையானது. பூனையும் குருவியும் முன்பு இருந்தது போலவே நட்புக் கொண்டிருந்தன.

ஒருமுறை அந்தக் குருவிக்கும் இன்னொரு குருவிக்கும் பகை ஏற்பட்டது. இரண்டும் ஒன்றை ஒன்று கொத்திக் கொண்டு சண்டையிட்டன. இதில் பூனையின் நண்பனான குருவி தோற்று விட்டது. தோற்ற குருவி அழுது கொண்டே தன் நண்பான பூனையிடம் வந்தது. அழுது கொண்டிருந்த குருவியைப் பார்த்த பூனை 'நண்பா ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?' என்று கேட்டது. உடனே குருவி, தனக்கும் இன்னொரு குருவிக்கும் நடந்த சண்டையையும், தான் தோல்வி அடைந்ததையும் கூறி, 'என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய குருவியை நீதான் தண்டிக்க வேண்டும்' என்று பூனையிடம் சொல்லியது.

'என்னால் என்ன செய்ய முடியும்?' என்று பூனை குருவியிடம் கேட்டது. 'உன் வலிமை உனக்குத் தெரியாது. நீ நினைத்தால் ஒரே அடியில் அந்தக் குருவியைக் கொன்று தின்ன முடியும்' என்றது குருவி.

உடனே பூனை தன் நண்பனுடன் சண்டையிட்ட குருவியை தேடிப் பிடித்தது. தன் கால்களில் வைத்து அழுத்தி கொன்றது. பின்னர் இறந்த குருவியை தின்றது. 'ஆஹா! குருவியின் மாமிசம் இவ்வளவு சுவையாக இருக்கிறதே! இதுவரை நமக்கு இது தெரியாமல் போய் விட்டதே! அனைத்து குருவிகளின் மாமிசமும் சுவையாகத்தான் இருக்குமோ?' என்று பூனை நினைத்தது. அப்போது பூனையின் நண்பனான குருவி 'நண்பா என்ன யோசனை?' என்று கேட்டவாறு பூனையின் அருகில் வந்தது. உடனே பூனை தன் நண்பன் என்றும் பாராது குருவி மீது பாய்ந்து அதைப் பிடித்து கடித்து தின்றது. தான் வினை தன்னையே சுட்டு விட்டது என்று அறியாமல் குருவி பூனைக்கு இரையானது. ■

அழகுக் குறிப்புகள்

இஞ்சி

கர்ப்ப காலத்தில் கர்ப்பிணி களுக்கு காலை வேளையில் ஏற்படும் மசக்கையை இஞ்சி டீ தடுக்கும். இஞ்சியை சிறு சிறு துண்டுகளாக வெட்டி மென்று சாப்பிட்டால் நெஞ்செரிச்சல், அஜீரணம் போன்றவை தீரும். மூட்டு வலி, குளிர் காய்ச்சல், தொண்டைப் புண், தலைவலி மற்றும் வீக்கங்களை நீக்கும்.

சிறு கீரை

செம்புச் சத்தும், அதிக வெப்பமும் கொண்ட இக்கீரை குடல், இதயம், மூளை, ரத்தம் ஆகியவைகளுக்கு நல்ல வலிமையை கொடுக்கக் கூடியது. சிறுகீரையை தினமும் உணவில் சேர்த்துக் கொண்டால் இருதய நோய்கள் தீரும்.

பூவரசம் பூ

மஞ்சள் வண்ணத்தில் பூத்துக் குலுங்கும் பூவரசம் பூ வண்டுக் கடிகளுக்கு மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. பூவரசம் பூவை அரைத்து சொறி, சிரங்கு போன்றவற்றின் மீது பூசினால் நிவாரணம் கிடைக்கும். ■

வாழ்வாதாரத்தை

வளமாக்கும் வங்கி சேவைகள்

வட்டி மானியம் : தெரிந்து கொள்ளுங்கள்!

கடன் தவணைகளை தவறாமல் திரும்பி செலுத்தும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் மூன்று இலட்சம் வரையில் 4 சதவீத வட்டியில் கடனுதவி!

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தகுதிகள் மற்றும் சலுகைகள்

இந்தத் திட்டத்தின் முக்கிய சிறப்பம்சங்கள் யாவை?

அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களும் ரூ. 3 இலட்சம் வரையில் 7% வட்டி விகிதத்தில் வட்டி மானியத் தொகையுடன் கூடிய கடன்கள் பெற தகுதி வாய்ந்தவை.

பொதுத்துறை வங்கிகள் (PSBs), வட்டார கிராமப்புற வங்கிகள் (RRBs) மற்றும் கூட்டுறவு வங்கிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, கடன் வழங்கும் நாளிலிருந்தே, (முன் கூட்டியே) 7% வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்கும்.

குறித்த நாட்களில், தவணை தவறாமல் கடன் தவணைகள் செலுத்திய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 3% கூடுதல் வட்டி மானியத் தொகை வழங்குவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 7% வட்டியிலிருந்து குறைத்து 4% வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டம் நமது நாட்டில் மிகவும் பின்தங்கிய மற்றும் ஒருங்கிணைந்த செயல் திட்டத்தின் கீழ் (IAP) உள்ள 150 மாவட்டங்களுக்கும் கிடைக்கும். இந்த குறிப்பிட்ட மாவட்டங்கள் முதல் பிரிவு மாவட்டங்கள் (Category - District) என்றழைக்கப்படும்.

வட்டி மானியத் தொகை பெற அனைத்து சுய உதவிக் குழுக்களும் தகுதி உள்ளவையா?

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மட்டும் வட்டி மானியத் தொகை பெற தகுதி உடையவை.

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள சுய உதவிக் குழுக்கள் (BPL-SHG) மட்டும் தான் இத்திட்டத்தின் பயன் பெற தகுதி உடையதா?

சமுதாயம் மற்றும் பொருளாதார நிலையை பொருட்படுத்தாமல், முதல் பிரிவு (Category-I) மாவட்டங்களில் உள்ள எல்லா மகளிர் சுய உதவிக் குழுக்களும் இந்த வட்டி மானியத் தொகைத் திட்டத்தில் பயன் பெற தகுதி உடையவை.

பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்பு (SGSY) திட்டத்தின் கீழ் கடன் பெற்ற சுய உதவிக் குழுக்கள் நிதி மானியத் தொகை திட்டத்தில் பயன் பெற தகுதி உடையவைகளா?

பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் அரசு மானியத்துடன் பொருளாதாரக் கடன் பெற்று, நிலுவையில் உள்ள சுய உதவி குழுக்கள், இந்தத் திட்டத்தில் பயன் பெற தகுதி இல்லை. எனினும், அரசு மானியத் துடன் வாங்கிய பழைய கடன்களை வெற்றிகரமாகத் திரும்ப செலுத்திய பிறகு புதிய கடன்கள் பெற்றுள்ள சுய உதவிக் குழுக்கள் இந்தத் திட்டத்தில் பயன் அடைய தகுதி வாய்ந்தவை.

பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்பு (SGSY) திட்டத்தின் கீழ் சுழல் நிதி (RF) பெற்ற சுய உதவிக் குழுக்கள் அதில் பயன் அடைய தகுதி உடையதா?

சுழல் நிதி மட்டும் பெற்ற சுய உதவிக் குழுக்கள் இந்தத் திட்டத்தில் பயன் பெற தகுதி வாய்ந்தவை. பொருளாதார கடன் மானியம் பெற்ற மகளிர் சுய உதவிக் குழு தகுதி இல்லாதவர்களாகக் கருதப்படுவர்.

10 நபர்களுக்கு குறைவாக உள்ள சுய உதவிக் குழுக்கள் வட்டி மானியத் தொகை திட்டத்திற்கு தகுதி பெறுமா?

ஆம். 10 நபர்களுக்கு குறைவாக உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களும், இத்திட்டத்தில் பயன் அடைய தகுதி பெறும்.

நகர்புறத்திலுள்ள சுய உதவிக் குழுக்கள் இந்த திட்டத்தின் மூலம் பயன் பெற முடியுமா?

முடியாது. இந்தத் திட்டம் கிராமப்புறத்தில் இருக்கும் சுய உதவிக் குழுக்களுக்கு மட்டும் தான் கிடைக்கும்.

அரசு நிறுவனங்கள் மூலம் துவக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் மட்டும் தான் வட்டி மானிய திட்டத்தில் பயன் பெற தகுதியுடையவைகளா?

கிராமப்புறத்திலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள், எந்த நிறுவனத்தால் துவங்கப்பட்டிருந்தாலும் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெற தகுதியுடையவை.

வட்டி மானியம் பெற, சுய உதவிக் குழுக்கள், பதிவு செய்யப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் அங்கத்தினராக இருக்க வேண்டும் என்பது அவசியமா?

இல்லை. வங்கி கடன் பெற்றுள்ள அனைத்து மகளிர் சுய உதவிக்

ரூ. 3 லட்சத்திற்கு மேல் வங்கிக் கடன் வாங்கி இருந்தால், ரூ. 3 இலட்சம் வரையில் உள்ள கடனுக்கு வட்டி மானியம் கிடைக்கும். ரூ. 3 இலட்சத்திற்கு மேல் உள்ள கடனுக்கு, வங்கி அதன் நடைமுறையில் உள்ள வட்டி வீதத்தில் வசூல் செய்யும். (7% மேலாக). தவறாமல் திரும்பச் செலுத்தினால், 3% கூடுதல் வட்டி மானியம் ரூ. 3 இலட்சம் வரை நிலுவையிலுள்ள கடன்களுக்கு மட்டும்தான் கொடுக்கப்படும்.

குழுக்களும் இத்திட்டத்தில் பயன் பெற தகுதி உடையவை. இந்தத் திட்டத்தில் பயன் பெற, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இருக்க வேண்டியது அவசியமில்லை.

விவசாய மகளிர் கூட்டமைப்பு, நீர்ப்பாசன தேக்க குளம் நிர்வாகக் கூட்டமைப்பு போன்ற குறிப்பிட்ட செயல்களுக்காக உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் இந்தத் திட்டத்தில் பயன் பெறுமா?

ஆம். அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களும், எந்த காரணத்திற்காகத் துவக்கப்பட்டிருந்தாலும், இந்தத் திட்டத்தில் பயன் பெறலாம்.

தனியார் வங்கியில் கடன் பெற்றுள்ள சுய உதவிக் குழுக்கள் இத்திட்டத்தில் பயன் பெற தகுதி பெறுமா?

ஆம். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 7% வட்டியில் தனியார் வங்கிகள் கடன் கொடுத்திருந்தால், இத்திட்டத்தில் பயன் பெறும். அந்தத் தனியார் வங்கிக்கு, 5.5% அளவிற்கு வட்டி மானியத் தொகை, மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும்.

எந்தத் தேதியிலிருந்து 7 % வட்டியில் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் கிடைக்கும்?

இந்தத் திட்டம் 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து (01.04.2013) செயல்படுத்தப்படுகிறது. 01.04.2013 ஆம் தேதியில் நிலுவையில் உள்ள கடன்கள், அன்றோ (அ) அதன் பிறகு கொடுக்கப்பட்ட எல்லா கடன்களுக்கும் வட்டி மாற்றம் செய்யப்பட்டு, 7% வட்டி விகிதத்தில் வட்டி வசூலிக்கப்படும்.

தவணை தவறாது கட்டிய சுய உதவிக் குழுக்களுக்கு மட்டும்தான் 7% வட்டியில் கடன் கிடைக்குமா?

அனைத்து வங்கிகளும், முன் கூட்டியே 7% வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்கும். இது திரும்ப செலுத்துவதற்கு தொடர்புடையது அல்ல.

இந்த வட்டி மானியம் 2013–14ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட புதிய கடன்களுக்கு மட்டும் கிடைக்குமா?

01.04.2013ஆம் தேதியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெயரில் நிலுவையில் உள்ள கடன்கள் மற்றும் அன்றோ (அ) அதன் பிறகு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்கள் எல்லாம் இத்திட்டத்திற்கு தகுதி பெறும்.

ரூ. 3 லட்சத்திற்கு மேலாக ஒரு சுய உதவிக் குழு வங்கிக் கடன் பெற்றால், அந்த குழு வட்டி மானியத்திற்கு தகுதி பெறுமா?

ரூ. 3 லட்சத்திற்கு மேல் வங்கிக் கடன் வாங்கி இருந்தால், ரூ. 3 இலட்சம் வரையில் உள்ள கடனுக்கு வட்டி மானியம் கிடைக்கும். ரூ. 3 இலட்சத்திற்கு மேல் உள்ள கடனுக்கு, வங்கி அதன் நடைமுறையில் உள்ள வட்டி வீதத்தில் வசூல் செய்யும். (7% மேலாக). தவறாமல் திரும்பச் செலுத்தினால், 3% கூடுதல் வட்டி மானியம் ரூ. 3 இலட்சம் வரை நிலுவையிலுள்ள கடன்களுக்கு மட்டும்தான் கொடுக்கப்படும்.

சுய உதவிக் குழுவிற்கு 3% கூடுதல் வட்டி மானியம் எப்போது கிடைக்கும்?

காலம் / தவணை தவறாமல், கடன் திரும்ப செலுத்திய சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் மூன்று இலட்சம் வரை நிலுவையில் உள்ள தொகைக்கு 3% கூடுதல் வட்டி மானியம் கிடைக்கும்.

தவணை / நேரம் தவறாமல் கடன் திரும்ப செலுத்துவது எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

பொதுவாக பின்வரும் காரணிகளைப் பூர்த்தி செய்வதாக ஒரு கணக்கு இருந்தால் அந்தக் கணக்கு நேரம் தவறாமல் திரும்ப செலுத்திய கணக்காக கருதப்படும்.

அ. ரொக்கக் கடன் அளவு

நிலுவை தொகை, கடன் வரம்பு (Limit) (அ) பணம் எடுக்கும் அளவுக்கு (Drawing Power) அதிகமாக, தொடர்ந்து 30 நாட்களுக்கு மேல் இருத்தல் கூடாது. அடிக்கடி வரவு / செலவு பதிவு செய்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் ஒரு வாடிக்கையாளராவது அந்த மாதத்தில் பணம் திரும்ப செலுத்தத் தூண்டப்பட்டிருக்க வேண்டும். வாடிக்கையாளர் தூண்டிய கடன் அந்த மாதத்தின் பற்று வட்டியை பூர்த்தி செய்ய போதுமானதாக இருத்தல் வேண்டும்.

விளக்கவுரை

வாடிக்கையாளரால் செலுத்தப்பட்ட வரவு

சுய உதவிக் குழுக்கள் ரொக்கக் கடன் கணக்கில், குறைந்தபட்சம், வங்கியால் 7%ல் விதிக்கப்பட்ட வட்டியை ஒவ்வொரு மாதமும் தவறாமல் செலுத்தியதை நேரம் தவறாது கட்டியதாக கருதப்பட வேண்டும்.

ஆ. தவணைக் கடன்கள் (Term Loans)

கடன் தொகை மற்றும் வட்டியை திரும்ப செலுத்த வேண்டிய உரிய தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் திரும்ப செலுத்துவது.

விளக்கவுரை

சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணை (EMI)யை திரும்ப செலுத்தும் அட்டவணைப்படி சுய உதவிக் குழுக்கள் கண்டிப்பாக திரும்ப செலுத்த வேண்டும். EMIயை செலுத்த வேண்டிய உரிய தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தி இருந்தால் அந்தக் காலம் வரை நேரம் தவறாது திரும்ப செலுத்தியவராகக் கருதப்படுவர்.

ஒரு சுய உதவிக் குழு நடப்பு மாதத்தில் சரியான நேரத்தில் பணம் திரும்ப செலுத்த தவறி விட்டு, எல்லா தவணை தவறிய (Overdue) கடன்களையும் பின்னர் திரும்ப செலுத்தி, தவணை தவறாது கடன் கணக்காக மாறினால், அந்த சுய உதவிக் குழு, வட்டி மானியத்திற்கு தகுதி வாய்ந்ததா?

எந்தக் காலகட்டத்தில் தவணை தவறாமல் இருந்ததோ, அந்த கால கட்டத்திற்கு மட்டும், அந்தக் குழுவிற்கு வட்டி மானியம் கொடுக்கப்படும்.

ஒரு சுய உதவிக் குழு, 2013–14 ஆம் ஆண்டுகளில் கடனை முழுமை யாக திரும்ப செலுத்தியிருந்து, வட்டி மானியத் தொகை பயன் பெறாமல் இருந்தால், அந்த குழு ஏதாவது பயன் பெற விண்ணப்பிக்கலாமா? அப்படியானால் அதற்குரிய வழிகள் என்ன?

2013 ஏப்ரல் முதல் தேதி முதல், நவம்பர் 30ஆம் தேதி வரையில் உள்ள கடன்களுக்கு, வங்கிகள் 7%க்கு மேல் வசூலித்த வட்டி தொகையையும், நேரம் தவறாமல் கடனை திருப்பு செலுத்தி இருந்தால், 3% கூடுதல் மானிய தொகையையும், அந்தந்த சுய உதவிக் குழுக்களின் சேமிப்பு கணக்குகளில் (Saving Bank account) வரவு வைக்கப்படும்.

வட்டி மானியத் தொகை பெறும் 150 மாவட்டங்களில் தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள் எவை?

1. விழுப்புரம், 2. வேலூர், 3. திருவண்ணாமலை, 4. தருமபுரி ■

(வட்டி மானியம் – பிரிவு 2 மாவட்டங்கள் அடுத்த இதழில்)

தேர்வுகளை

எளிதாக எதிர்கொள்ள...

10 மற்றும் 12ஆம் வகுப்பு ஆண்டுத் தேர்வுகளுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டு விட்டன. மாணவ – மாணவிகள் முழு மூச்சுடன் தேர்வை எதிர் கொள்ள தயாராகி வருகின்றனர். பள்ளிகளில் சிறப்பு வகுப்புகள் நடைபெறத் துவங்கி விட்டன. தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறவும், பொதுத் தேர்வில் எளிதாக வெற்றி பெறவும் சில வழிமுறைகளை மாணவ மாணவிகள் பின்பற்றினாலே அவர்களுக்கு வெற்றி எளிதாக இருக்கும்.

நாம் ஒன்றை செய்யும் போது திட்டமிட்டு செய்தால், அது சிறப்பாக அமையும். எனவே, தேர்விற்குப் படிப்பதற்கு முன் திட்டமிட்டுப் படிக்க வேண்டும். படித்த பாடங்கள் மறக்காமல் இருக்க, படித்தவற்றை ஒவ்வொன்றையும் எழுதி பார்க்க வேண்டும். ஏனெனில் புத்தகத்தில் உள்ளவற்றை படித்துப் பார்த்தால் பாடங்கள் நினைவில் நிற்காது.

ஒரு நாளில் எட்டு மணி நேரம் படிக்கத் திட்டமிட்டால், ஆறு மணி நேரம் படிப்பதற்கும் மீதமுள்ள இரண்டு மணி நேரம் படித்தவற்றை நினைவுபடுத்தி பார்ப்பதற்கும் பயன் படுத்துங்கள். படிக்கும் போது டி.வி. பார்ப்பது, பிறருடன் அரட்டை அடிப்பது போன்றவற்றைத் தவிர்க்கவும். இரவில் அதிக நேரம் கண்விழித்துப் படிக்க வேண்டாம். அதிகாலை யில் எழுந்து படிப்பது நல்லது. வீட்டில் பாடப் புத்தகங்கள், நோட்டுகள் போன்றவற்றை தனியே வைத்து விடுங்கள். இல்லையென்றால் கண்ட இடத்தில் வைத்து விட்டு தேடிக் கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்படும்.

முக்கிய தேர்வுகளில் எந்த விதத்தில் கேள்விகள் வருகின்றன என்பதை தெரிந்து கொண்டு, அதில் வந்துள்ள கேள்விகளை தொகுத்து படியுங்கள். படிக்கும் போது நல்ல முறையில் தேர்வு எழுதி விடுவேன் என்ற நம்பிக்கையுடன் படியுங்கள். படிக்கும் போது பாடங்கள், சமன்பாடுகள், சூத்திரங்கள் போன்றவற்றை தனியாக எழுதி வைத்துக் கொண்டால் ரிவிஷன் செய்யும் போது உதவியாக இருக்கும்.

வெயில் காலத்தில் தான் தேர்வு வருகிறது என்பதால் அதிகமாக தண்ணீர், இளநீர் குடியுங்கள். குளிர்ந்த நீரில் அடிக்கடி கண்களைக் கழுவுங்கள்.

விளையாட்டில் ஆர்வமாக இருப்பது தவறில்லை. தினமும் பயிற்சி பெற வேண்டும் என்றாலும் அன்றைய பாடங்களை அன்றைக்கே படித்து விட்டால் எல்லா நாட்களும் விளையாடப் போகலாம். சிறு உடல் நலக்குறைவு என்றாலும் கைவைத்தியம் பார்த்து உடல் நலக்குறைவை அதிகப்படுத்தாமல், தக்க மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெறுங்கள்.

கொதிக்க வைத்து ஆறிய நீரைக் குடியுங்கள். தேர்வுக்கு சில நாட்களுக்கு முன்னரே, பேனா, பென்சில், ரப்பர், ஸ்கேல், அடையாள அட்டை என தேர்வுக்குத் தேவையான பொருட்களையும் தயாராக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் வழக்கமாக உபயோகிக்கும் எழுது பொருட்களையே தேர்விற்கும் பயன்படுத்துங்கள். அப்போதுதான் வேகமாகவும் அழகாகவும் எழுத முடியும்.

தேர்விற்கு அவசரமாகக் கிளம்பாமல், சரியான நேரத்தில் தேர்வு அறைக்குச் செல்லவும். மாணவ – மாணவிகளே தேர்வினைக் கண்டு மலைத்து நிற்காமல் உற்சாகத்துடன் அதை எதிர்கொள்ளுங்கள். வெற்றி உங்களைத் தேடி வரும். ■

ஒரு நாளில் எட்டு மணி நேரம் படிக்கத் திட்டமிட்டால், ஆறு மணி நேரம் படிப்பதற்கும் மீதமுள்ள இரண்டு மணி நேரம் படித்தவற்றை நினைவுபடுத்தி பார்ப்பதற்கும் பயன் படுத்துங்கள். அதிகாலையில் எழுந்து படிப்பது நல்லது.

ஊர் கூடித்

தேர் இழுப்போம்...!

– கோ. பிரம்மநாதன்

நம் ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும், நாள் ஒன்றுக்கு குறைந்த பட்சம் இரண்டரை கிலோ கழிவு வெளியேறுகிறது என்று சொன்னால் நம்ப முடிகிறதா? இதில் வீட்டுக் குப்பை, காய்கறி மற்றும் எஞ்சிய உணவு, மருத்துவக் கழிவு ஆகிய திடக் கழிவுகளே இந்த குப்பை.

ஒவ்வொரு வீட்டிலும் இரண்டரை கிலோ என்றால் தெரு எங்கிலும் எவ்வளவு குப்பை என்று சிந்தியுங்கள். நூறு வீடுகள் அடங்கிய தெருவில் கிட்டத்தட்ட 250 கிலோ. பத்துத் தெருக்கள் இருக்கும் சிறிய பகுதியில் 2500 கிலோ குப்பை நாளொன்றுக்கு வெளியேறுகிறது.

இந்தக் குப்பையெல்லாம் எங்கே போகிறது? சில இடங்களில் முறையாக குப்பைத் தொட்டியில் கொட்டப்பட்டு, லாரிகள் மூலமாக ஊருக்கு வெளியில் சேர்க்கப்பட்டு விடுகின்றன. இந்த வசதிகள் எதுவுமே இல்லாத பெரும்பான்மையான பகுதிகளில் அவை ரோட்டிலும், பக்கத்திலிருக்கும் காலி இடங்களிலும் கொட்டப்பட்டு நாட்கணக்காக நாறிக் கொண்டு, கொசுக்களையும், புதுப்புதுக் கிருமிகளையும் உருவாக்கிக் கொண்டு வருகின்றன.

நம்முடைய குழந்தைகளுக்கும், நமக்கும் வரக் கூடிய பல்வேறு விதமான நோய்களுக்கு மூலக்காரணமே இந்தக் கிருமிகளை பரப்பும் குப்பைகள்தான். இவை போதாதென்று, கழிப்பறைகளில் இல்லது நாமும் நம் குழந்தைகளும் தெருக் களிலும், திறந்தவெளியிலும் மலம், சிறுநீர் போன்றவற்றை கழிக்கிறோம். மற்ற குப்பைகளை விட இவற்றில்தான் பெரும்பான்மையான தொற்றுக் கிருமிகள் உருவாகின்றன.

இவற்றை உணர்ந்து கொண்ட நம் அரசு, பல்வேறு திட்டங்களின் மூலம் குப்பைகளை சீராக அகற்றும் முறையையும், கழிப் பறைகளைக் கட்டி அவற்றைப் பயன்படுத்த மக்களிடம் விழிப்புணர்வையும், கழிப்பறை கட்டுவதற்குத் தேவையான குறைந்தபட்ச நிதியையும் அளிக்கிறது.

கழிப்பறை கட்ட ரூ. 12,000/–மும், கட்டுமானத்தை சரிவர செய்து கொள்ள பொதுமான பயிற்சியையும் அளிக்க வெவ் வேறு நிலைகளில் அரசு போர்க்கால நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

நம் பஞ்சாயத்து தலைவர்களையோ, வட்டார வளர்ச்சி அலுவலர்களையே, சுகாதாரத் தூதுவர்களையோ அல்லது சுய உதவிக் குழுக்களின் நிர்வாகிகளையோ இதைப் பற்றிக் கேட்டாலே இதற்கான தகவல்களையும், விண்ணப்பத்தையும் பெற்று விடும் அளவிற்கு வீட்டோடு கழிப்பறை கட்டிக் கொள்ளும் திட்டத்தை எளிமைப்படுத்தி வைத்திருக்கிறது நமது அரசு.

இவ்வளவு பிரயத்தனங்களை அரசு எடுத்திருப்பதற்குக் காரணம் என்ன? சுகாதார கேடின் காரணமாக நாம் உடனுக்கு உடன் உணரும் நோய்கள் மட்டுமின்றி நம்முடைய உடல் வளர்ச்சி மற்றும் மன வளர்ச்சி ஆகியவற்றையும், அவற்றால் நம்முடைய உற்பத்தித் திறனும், பொருளாதாரமும் வெகுவாக பாதிக்கின்றன.

நாம் மருந்துகளுக்கும், மருத்துவமனைகளுக்கும் ஒவ்வொரு வருடமும் பணம் செலவு செய்வது மட்டுமில்லாமல், உடல் வருத்தமும் அடையாத்தானே செய்கிறோம்? எல்லா வற்றிற்கும் மேல், எவ்வளவு உயிர்களை இழந்து விடுகிறோம்? அப்படியிருக்கும் போது, குப்பைகளை சரியான தொட்டியில் கொட்டுவதும், கழிப்பறைகளைக் கட்டுவதும் அரசின் கடமையா? அவர்களுடைய முயற்சியால் மட்டும் பெரும் மாற்றம் ஏதேனும் நிகழ முடியுமா? அரசு எடுக்கும் முயற்சிக்கு நம்மால் இயன்ற ஒத்துழைப்பைக் கொடுக்கும் போதுதானே இந்த முயற்சி வெற்றி பெறும்.

இவை அனைத்தையும் சிந்திக்க வேண்டிய முக்கியமான தருணத்தில் நாம் இருக்கின்றோம். குப்பைக் கூளத்தில் இத்தனை நாட்கள் நாம் வாழ்ந்திருந்தாலும், நம்முடைய பிள்ளைகளுக்காவது சுத்தமான வீட்டையும், சுற்றுப்புறத்தை யும் அளிப்போம். இத்தனை நாட்கள் நாம் திறந்த வெளியில் மலம் கழித்திருந்தாலும் நம் வீட்டு பெண்களுக்காகவும், குழந்தைகளுக்காகவும் ஒரு கழிப்பறையைக் கட்டி பயன் படுத்த ஆரம்பிப்போம்.

கழிப்பறை பயன்படுத்தாதவர்கள் உடனே கழிப்பறையைப் பயன்படுத்த ஆரம்பிக்க வேண்டும். உடனடியாக பயன் படுத்துவதற்கு ஏதுவாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி சுகாதார வளாகங்கள் இருக்கின்றன. வீட்டோடு கழிப்பறைக் கட்டிக் கொள்ள தேவையான தகவல்களும், மானியமும் அளிக்க அரசு தயார் நிலையில் இருக்கிறது.

குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து, சரியான குப்பைத் தொட்டிகளில் இடுவோம். குப்பைகளை முறையாக வெளியேற்றுவதற்கும், மறுசுழற்சி செய்வதற்கும் சீரானத் திட்டங்களை அரசு வகுத்து வருகின்றது.

பல்வேறு காலகட்டத்தில் பல்வேறு புரட்சிகளை கண்ட தமிழகம் இப்போது நடத்திக் காட்ட வேண்டிய புரட்சி, சுகாதாரப் புரட்சி, கழிப்பறை இல்லாதவர்கள் கழிப்பறை கட்ட வேண்டும். கழிப்பறை கட்டியவர்கள் கழிப்பறையைப் பயன் படுத்த வேண்டும். கழிப்பறையைப் பயன்படுத்துபவர்கள் பக்கத்து வீட்டில் இருப்பவர்களையும், நண்பர்களையும், உறவினர்களையும் கழிப்பறைக் கட்டி பயன்படுத்த வலியுறுத்த வேண்டும்.

அரசு திட்டங்களை வகுப்பதால் மட்டுமே மாற்றங்கள் நிகழ்ந்தது இல்லை. மக்களும் அவற்றை சிரமேற்கொண்டு ஒத்துழைத்தால் மட்டுமே மாற்றங்கள் நிகழும்.

வாருங்கள்... ஊர் கூடித் தேர் இழுப்போம்...! ■

தலைமையகம்

மாநில அளவிலான ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தலைமையில், மாநில அளவிலான ஊரக வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் 30.12.2014 அன்று சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குனர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., கூடுதல் இயக்குனர்கள், கண்காணிப்பு பொறியாளர் (ஊரக வளர்ச்சி) மற்றும் அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி) மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

கல்லூரி சந்தை

நீலகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் கல்லூரிச் சந்தை, கேத்தி சி.எஸ்.ஐ. பொறியியல் கல்லூரியில் 20.01.2015 முதல் 22.01.2015 வரை நடைபெற்றது. இக்கல்லூரிச் சந்தையினை நீலகிரி மாவட்ட ஆட்சியர் முனைவர். பொ. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன், மாவட்ட திட்ட மேலாளர் திரு. எம். ரத்தினவேல், கல்லூரி முதல்வர் டாக்டர். ஜே. ஜார்ஜ் ஹெலன் சந்திரன் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். இந்தக் கல்லூரி சந்தையில் நீலகிரி, ஈரோடு, நாமக்கல், கோயமுத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழு மகளிர் தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தனர். ■

கன்னியாகுமரி

வேலை வாய்ப்பு முகாம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், 04.01.2015 அன்று கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரியில், மாவட்ட ஆட்சியர் டாக்டர் என். சுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இம்முகாமில் பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்வேறு அரசுத் துறைகளின் அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. எம். சிவக்குமார் அவர்கள் நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார்.

இந்த முகாமில் சுமார் 1075 இளைஞர்களும் இளம் பெண்களும் கலந்து கொண்டனர். சென்னை, கோவை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படும் எஸ்.டீ. எக்ஸ்போர்ட்ஸ், விநாயகா கேட்டர்ஸ், காட்டன் பிளாசம்ஸ், யுரேகா போர்ப்ஸ், இண்டக்கரேட்டட் எண்டர்பிரைசஸ், பூரணி டெக்ஸ்லைஸ், ஜெல் இன்டெக், ஏர்செல், ஐபி ரிங்க்ஸ், எமர்ஜ், டி ஐ மெட்டல்ஸ், இன்போ இன்டெக் மற்றும் சாரதா குரூப்ஸ் ஆப் கம்பெனி உள்பட பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்கள் நிறுவனங்களுக்குத் தேவையான பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

முகாமிலேயே 312 நபர்களுக்கு பணி வாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சியில் 10 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது. ■

கன்னியாகுமரி

முதல் முறையாக ரூ. ஒரு கோடி பெருங்கடன்

கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இராஜக்காமங்கலம் வட்டாரத்தைச் சார்ந்த, ஆத்திக்காட்டுவிளை ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பிற்கு, மேல கிருஷ்ணன்புதூர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் ரூபாய் ஒரு கோடி பெருங்கடனாக, 22.12.2014 அன்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தின் போது, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. சஜ்ஜன் சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். ■

திருவாரூர்

கலாச்சாரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா

திருவாரூர் மாவட்டத்தில் மகளிர் திட்டம் சார்பில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கான கலாச்சாரப் போட்டிகளை திருவாரூர் மாவட்ட ஆட்சியர் முனைவர் மா. மதிவாணன், இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார்.

இவ்விழாவில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஜெயச்சந்திரன், மாவட்ட வருவாய் அதிகாரி திரு. மணிமாறன், மகளிர் திட்ட அலுவலர் திருமதி. ஸ்ரீலேகா தமிழ்செல்வன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோலம், பேச்சு, நாடகம், குழுப்பாட்டு, எறிபந்து, ஓட்டப் பந்தயம், குறைவேக சைக்கிள் ஓட்டுதல், டென்னி காட் ஆகியவற்றில் போட்டிகள் நடைபெற்றன. முதற்கட்டமாக நடைபெற்ற வட்டார அளவிலான கலாச்சாரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, 05.01.2015 அன்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். ■

அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அலுவலகங்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், பெண்களுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தி, அவர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கி, பொருளாதார சுய சார்பு பெற்றவர்களாக மாற்றுவதில் பெரும் பங்காற்றி வருகிறது. மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்டம் மற்றும் ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகங்களின் முகவரிகள் இப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

1	திருமதி. சினேகலதா, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : 044 - 22350636	9	திரு. எஸ். மொஹமத் சகாபுதீன், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அறை எண். 212, (புதிது), 2வது மாடி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தாந்தோணிமலை, கரூர் - 639 005. தொலைபேசி : 04324 - 257377
2	திரு. டி. முருகன், திட்ட இயக்குநர் (பொ), மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் - 641 018. தொலைபேசி : 0422 - 2301855	10	திரு. ஜி. ராமையா, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் எண். 106 / 107, 2வது மாடி, ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம், கிருஷ்ணகிரி - 635 001. தொலைபேசி : 04343 - 235267
3	திருமதி. பி. காஞ்சனா, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் நெ. 2, ராதா இல்லம், பீச் ரோடு, வண்ணாரபாளையம், கடலூர் - 607 001. தொலைபேசி : 04142 - 294143	11	திரு. ஏ. பாண்டியன், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ரிசர்வ் லைன் பஸ் நிறுத்தம் அருகில், புது நத்தம் ரோடு, மதுரை - 625 014. தொலைபேசி : 0452 - 2526220
4	திரு. ஜி. ராமையா, திட்ட இயக்குநர் (பொ), மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2வது மாடி, DDDC பில்டிங், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தருமபுரி - 636 705. தொலைபேசி : 04342 - 233298	12	திருமதி. பி. மதுமதி, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அறை எண். 314, 3வது மாடி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், நாகப்பட்டினம் - 611 003. தொலைபேசி : 04365 - 253061
5	திருமதி. சி. ஜே. கோகிலா, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தரை தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திண்டுக்கல் - 624 005. தொலைபேசி : 0451 - 2460050	13	திரு. ஏ. ஆர். சிவராமன், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் நெ. 274-பி, 274-டி-1, அலெக்ஸாண்டர் காட்டேஜ், பேங்க் லைன், வண்டிசோலை, நீலகிரி - 643 001. தொலைபேசி : 0423 - 2444430/35
6	திருமதி. பி. ரேணுகாதேவி, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 1வது மாடி, பூமாலை வணிக வளாக கட்டிடம், பெருந்துறை ரோடு, குமலன் குட்டை, ஈரோடு - 638 011. தொலைபேசி : 0424 - 2257087	14	திரு. வி. திருவரங்கம், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2வது மாடி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், நாமக்கல் - 637 003. தொலைபேசி : 04286 - 281131
7	திருமதி. பி. கிருஷ்ணம்மாள், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், காஞ்சிபுரம் - 631 502. தொலைபேசி : 044 - 2723 6348	15	திருமதி. ஜி. மலர்விழி, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பெரம்பலூர் - 621 212. தொலைபேசி : 04328 - 225362
8	திரு. எஸ். சுரேஷ், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பூமாலை வணிக வளாகம், வடசேரி, நாகர்கோவில், கன்னியாகுமரி - 629 001. தொலைபேசி : 04652 - 272275	16	திரு. ஜி. இளங்கோ, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 52, எழில் நகர், ஆட்சியர் அலுவலகம் (அஞ்சல்), புதுக்கோட்டை - 622 005. தொலைபேசி : 04322- 230950

17	டாக்டர் ம. ஜெயராமன், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 1/314, பாரதி நகர், வெளிப்பட்டினம் (அஞ்சல்), இராமநாதபுரம் - 623 535. தொலைபேசி : 04567 - 231341	25	திருமதி. வி. ஸ்ரீலேகா, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், 2வது மாடி, புதிய ஆட்சியர் அலுவலக வளாகம், திருவாரூர் - 610 101. தொலைபேசி : 04366 - 221031
18	திரு. எஸ். ஈஸ்வரன், திட்ட இயக்குநர் (பொ), மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 207, 2வது மாடி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் - 636 001. தொலைபேசி : 0427 - 2411552	26	திருமதி. கே. இந்துபாலா, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2வது மாடி, ஆட்சியர் அலுவலக வளாகம், கோரம்பாளையம், தூத்துக்குடி - 101. தொலைபேசி : 0461 - 2341282
19	திருமதி. எஸ். சரோஜாதேவி, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 44/69, எழில் காம்ப்ளக்ஸ், தரை தளம், வ. உ. சி. தெரு, சிவகங்கை - 630 561. தொலைபேசி : 04575 - 240962	27	திரு. ஆர். கோமகன், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருச்சி - 620 001. தொலைபேசி : 0431 - 2412726
20	திரு. வி. ஜெயக்குமார், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கொக்கிர குளம், பழைய ஆட்சியர் அலுவலக வளாகம், திருநெல்வேலி - 627 009. தொலைபேசி : 0462 - 2500302	28	திருமதி. ஜி. லோகநாயகி, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பூமாலை வணிக வளாகம், கற்பகம் சூப்பர் மார்க்கெட் எதிரில், அண்ணா சாலை, வேலூர் - 632 001. தொலைபேசி : 0416 - 2215765
21	திருமதி. எஸ். எஸ். தனபதி, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் எண். 4/15, 7வது தெரு, காந்தி நகர், திருவண்ணாமலை - 606 601. தொலைபேசி : 04175 - 227476	29	திரு. ஆர். மணி, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் TAHDCO பில்டிங், நெ. 62/56-ஏ, சென்னை நெடுஞ்சாலை, (அரசு மருத்துவமனை எதிரில்) விழுப்புரம் - 605 602. தொலைபேசி : 04146- 223736
22	திரு. எம். சிவகுமார், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பிளாட் எண். சி-5, ராமகிருஷ்ணாபுரம், (மணிமண்டபம் அருகில்), புதுக்கோட்டை ரோடு, தஞ்சாவூர் - 613 007. தொலைபேசி : 04362 - 277907	30	திரு. வி. பிச்சை, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், விருதுநகர். தொலைபேசி : 04562 - 252036
23	திருமதி. ஜே. உஷாதேவி, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அறை எண். 71, 4வது மாடி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தேனி - 625 531. தொலைபேசி : 04546 - 255203	31	திருமதி. எஸ். சாமுவேல் இன்பதுரை, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், அரியலூர். தொலைபேசி : 04329 - 228505
24	திரு. சி. கே. வீரணன், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், 1வது மாடி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருவள்ளூர் - 602 001. தொலைபேசி : 044 - 2766 4528	32	திரு. ஜே. ரூபன் சங்கர்ராஜ், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருப்பூர். தொலைபேசி : 0421- 2218770

நம் மாவட்டம்

கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 21.01.2015 அன்று மாவட்ட அளவிலான சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான கலாச்சாரப் போட்டிகள் நடைபெற்றன. அப்போது நடைபெற்ற நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படும் கூட்டமைப்புகளில் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற 31 கூட்டமைப்புகளுக்கு தலா ரூ. 1 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 31 இலட்சம் ஊக்கத் தொகையினை மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு. கோ. இராமையா அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் திரு. த. பொ. ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். ■

கோயமுத்தூர் கல்லூரிச் சந்தை

கோயம்புத்தூர் மாவட்ட மகளிர் திட்டம் சார்பில், சித்தாபுதூர் ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 05.12.2014 மற்றும் 06.12.2014 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்ற கல்லூரிச் சந்தையினை கோவை மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு. த. முருகன் துவக்கி வைத்தார். இக்கண்காட்சியில் 32 சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு, தாங்கள் தயாரித்த கைப்பைகள், மென்பொம்மைகள், காட்டன் புடவைகள், பரிசுப் பொருட்கள், தின்பண்டங்கள், அலங்கார நகைகள் மற்றும் பேன்சி பொருட்களை ரூ. 1,32,000/-க்கு விற்பனை செய்தனர். ■

இராமநாதபுரம்

கூட்டமைப்புகளுக்குப் பெருங்கடன்

இராமநாதபுரம் மாவட்ட நயினார் கோயில் ஒன்றியம், வாணியவல்லம் கிராமத்தில் 10.12.2014 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. க. நந்தகுமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் முகாமில், மாண்புமிகு தமிழ்நாடு விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தரராஜன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். இம்முகாமில் வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கொளுவூர், பெருங்களூர் மற்றும் அக்கிரமேசி ஆகிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடனாக முறையே ரூ. 20 இலட்சம், ரூ. 58.50 இலட்சம், ரூ. 25.00 இலட்சம் ஆகியவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார். மேலும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் சார்பில் நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கும் கடனுதவி வழங்கப்பட்டது. மாவட்ட திட்ட இயக்குநர் டாக்டர் ம. ஜெயராமன், உதவித் திட்ட அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

விழுப்புரம்

வேலைவாய்ப்பு முகாம்

விழுப்புரம் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 07.01.20115 அன்று மரக்காணம், ஓமந்தூர் ஸ்ரீ ராம் பள்ளியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் மரு. இரா. மணி, பள்ளி தாளாளர் திரு. ரகுராமன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் மரு. எஸ். மணி, பள்ளி முதல்வர் திரு. ராமு, உதவித் திட்ட அலுவலர்கள் திரு. ரமேஷ் பாபு மற்றும் திரு. கமல்ராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இம்முகாமில் L & T, TVS, ABT Maruthi உட்பட 25 நிறுவனங்கள் கலந்து கொண்டு, இம்முகாமில் கலந்து கொண்ட சுமார் 2800க்கும் மேற்பட்ட இளைஞர்களில் 379 நபர்களுக்கு உடனடி பணியாணையினை வழங்கின. மேலும் 365 நபர்கள் நேர்முகத் தேர்வுக்கு தேர்வு செய்யப்பட்டனர். ■

கரூர்

வேலை வாய்ப்பு மேளா

கரூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கரூர் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 27.12.2014 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமினை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி மு. அருணா அவர்கள் துவக்கி வைத்தார். இம்முகாமில் 35க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்து கொண்டனர். சுமார் 1643 இளைஞர்கள் வேலை வாய்ப்பு வேண்டி விண்ணப்பம் வழங்கினர். அதில் 741 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, 505 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட உள்ளது.

இந்த வேலைவாய்ப்பு மேளாவில் வாழ்வதார இயக்கத்தின் மாவட்ட திட்ட இயக்குநர் திரு. செ. ம. முகம்மது சகாப்புத்தீன், உதவித் திட்ட அலுவலர்கள், தாட்கோ பொது மேலாளர், சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

தேனி

இயக்க விழிப்புணர்வு ரதஊர்வலம்

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் சின்னமனூர் மற்றும் கம்பம் வட்டாரங்களில் வாழ்வாதார இயக்கத்தின் நோக்கம், மகளிர், நலிவுற்றோர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோரின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆகியவை குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கலை நிகழ்ச்சிகளுடன் கூடிய விழிப்புணர்வு ரத ஊர்வலத்தை தேனி மாவட்ட ஆட்சியர் திரு. ந. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் 02.01.2015 அன்று துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட இயக்குநர் திருமதி. ஜா உஷாதேவி மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

நாமக்கல்

பணி நியமன ஆணை

நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் சார்பில் ராசீபுரம் ஆண்டகலூர் கேட் திருவள்ளுவர் அரசு கலை அறிவியல் கல்லூரியில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 06.01.2015 அன்று நடைபெற்றது. இதில் சென்னை, கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் பெங்களூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டன. இந்த முகாமில் சுமார் 2,250 நபர்கள் பங்கேற்றனர். இதில் 439 நபர்கள் பணிக்கு தேர்வு செய்யப்பட்டனர். பணிக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு நாமக்கல் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு. திருவரங்கம், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. தேவகுமார், திருவள்ளுவர் அரசு கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் திரு. கணேசன் ஆகியோர் பணி நியமன ஆணைகளை வழங்கினர். உதவித் திட்ட அலுவலர்கள் சாகுல் ஹமீது, குமாரவேலு, சுந்தரவடிவேலு, புதுவாழ்வு திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் சுரேஷ், அரசுத் துறை அலுவலர்கள், தனியார் துறை நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். ■

திருவண்ணாமலை

வங்கியாளர்களுக்கான கருத்துப் பட்டறை

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக 21.12.2014 முதல் 30.12.2014 வரை ஆறு கட்டங்களாக ஒன்றியம் வாரியாக, வங்கியாளர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கம் இந்தியன் வங்கியின் மண்டல மேலாளர் திரு. மகேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட திட்ட இயக்குநர் திரு. தனபதி அவர்கள் இயக்கம் குறித்து விளக்கமாக உரையாற்றினார். இந்தக் கருத்தரங்கில் முன்னோடி வங்கி மேலாளர், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர், பங்வேறு வங்கிகளின் அலுவலர்கள், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஒவ்வொரு கருத்தரங்கும் நிறைவுற்ற மறுநாள் சம்பந்தப்பட்ட ஒன்றியங்களில் கடன் மேளா நடத்தப்பட்டு சுய உதவிக் குழுக்களின் கடன் தேவை குறித்த திட்ட வரைவு வங்கியாளர்களுக்கு அனுப்பப்பட்டது. ■

பூக்கள்

மனநோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மனநோயால் பாதிக்கப்பட்டவர்களை மனித நேயத்துடன் அணுகுவதற்கும் தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் உருவாக்கியுள்ள 'பூக்கள்' என்ற நாடகம் முற்றத்தில் தொடர்ந்து வெளியிடப்படுகிறது. கடந்த மாத கதையின் தொடர்ச்சியை இந்த இதழில் காணலாம்.

மாமியார்: ஏய் இளவரசி... ஏய் இளவரசி... பாத்தியா இவள... நான் கூப்பிட்டுக்கிட்டே இருக்கேன். இவ என்ன ஏதுன்னு கண்டுக்காம போயிட்டு இருக்கா?

மாமியார்: அம்மாடி இப்பதான் நிம்மதியா இருக்கு. என்னோட மருமகள காணோம். இப்பவாவது டிவி பார்க்கலாம்.

(டிவியைப் போடுதல்) (டிவியில் மகாபாரதம் பாடல் ஒலிப்பது)

மருமகள் : இந்த மகாபாரதம் தான் குறைச்சலா இருக்கு. எப்பப் பார்த்தாலும் மகாபாரதம்... மகாபாரதம்... (கையில் இருக்கும் ரிமோட்டைப் பிடுங்கி சேனலை மாற்றுவது)

மருமகள் : நானே வாணி ராணி என்ன ஆச்சி... அத பாக்கலாமுன்னு நினைச்சா... இந்த அம்மா மகாபாரதத்தை பார்த்துட்டு இருக்கு... (இதுக்கு இதே வேலையாப் போச்சு... ச்சு...)

மாமியார் : ஆமாம் எப்ப பாரு என்னையே சொல்லுடி. பெத்த மகள பாக்கறதுக்கு துப்பில்ல. என்னை கரிச்சிக் கொட்டற. அந்த பொண்ணு என்னன்னா ஸ்கூல் துணியக் கூட மாத்தல. என்னான்னு கேட்டா ஒண்ணுமே சொல்லல. அந்த டிரைவர் 10 நாளா அவள தேடி தேடி கூட்டிட்டு வரதா சொல்றாரு. அவள போயி பாருடின்னா என்னோட சண்டை போட வரா...

மருமகள்: ஆமாம் நிறுத்து. நீ டிவி பாக்கறதுக்கு இது ஒரு சாக்கா போச்சு. எல்லாம் இந்த பொண்ணு பண்ற வேலை. இவள என்ன பண்றேன் பாரு. இளவரசி... ஏய்... இளவரசி...

அம்மா: இளவரசி... இளவரசி... நான் இவ்வளவு நேரம் கூப்பிடுறேன். ஏதாச்சும் குரல் கொடுக்கிறாளா பார்... (மகளை அடித்தல்)

இசைக்கொத்து :
என்னாச்சிதோ...ஏதாச்சிதோ...
குழந்தையோட மனசுக்குத்தான்...
குடும்பச் சண்டை காரணமோ...
குலவிளக்கின் குணத்துக்குத்தான்...

அப்பா : ஏ...நிறுத்துடி... அவ என்ன பண்ணானு அவள போட்டு இப்படி அடிக்கிற? இளவரசி செல்லம் அம்மா அடிச்சானு கோவமா? அதைவிட இந்தாம்மா உனக்கு ரொம்பவும் பிடிக்குமுன்னு இந்த நாய் பொம்மைய வாங்கிட்டு வந்திருக்கேன். இனிமே என் செல்லம் சந்தோஷமா இருக்கணும். இந்தாம்மா... (பொம்மையை மகளிடம் கொடுத்து அதை வாங்கி அப்படியே அருகில் வைத்து விடுவது)

அம்மா : இப்பப் பாத்தியா இப்படித்தான் நாம என்ன சொன்னாலும் எதுவுமே கண்டுக்கறது இல்ல. இப்படி இருந்தா என்ன செய்யறது? சாப்பாடு கொடுத்தாலும் சாப்பிடறது இல்ல, தூங்கறதில்லை. பிள்ளைகளோடு விளையாடுறது இல்ல. பல்லு விளக்கறது இல்ல. யூனிபார்ம் கூட மாத்தறது இல்ல. இப்படி இருந்தா உன் மகளை கொஞ்சுவாங்களா?

மாமியார் : பார்த்தியாடா, இப்படித்தான் எப்பப்பாரு இவ திட்டினு இருக்கறா. இளவரசியும் அதுக்கு தகுந்த மாதிரியே இருக்கா. ஏண்டா ஒரு வேளை ஆம்பளப் பயக கேலி பண்ணியிருப்பாங்களோ?

மருமகள் : இதுக்கும் வந்துட்டியா கலகம் வைக்க. உன் வேலையைப் பார்த்துட்டு போ. ஆம்பளப் பயக கேலி பண்ணுனாங்களாம். ஏன் நீ போய் சிஐடி வேலை பார்க்க வேண்டியதுதானே? ■

(தொடரும்)

இயக்கச் செயல்பாடுகள் ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்த மாதாந்திர ஆய்வுக் கூட்டம் சென்னை அன்னை தெரசா மகளிர் வளாக கூட்ட அரங்கில் 22.01.2015 அன்று நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர் திரு. ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., மற்றும் கூடுதல் இயக்குநர்கள், அலுவலர்கள், அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வில் பேசிய ஊராட்சித் துறை செயலர் அவர்கள், இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்தும், அடைய வேண்டிய இலக்குகளை அடைவதற்கான ஆலோசனைகளையும் வழங்கியதுடன், இயக்கத்தின் வெற்றிக்கு அனைவரும் முனைப்புடன் செயலாற்றிட வேண்டும் என்று கூறினார். ■

தண்ணீர் சிக்கனம்

ஒரு குழாயில் ஒரு விநாடிக்கு ஒரு சொட்டு தண்ணீர் வீணானால் ஆண்டுக்கு 10,000 லிட்டர் தண்ணீர் வீணாகும். எனவே தண்ணீர் குழாய்களை சரியாக மூடவும்.

பிளாஸ்டிக் வேண்டாம்

ஒவ்வோர் ஆண்டும் உலகில் 50,000 கோடி பிளாஸ்டிக் பைகள் விற்பனை ஆகின்றன. பிளாஸ்டிக் மக்காது என்பதால், துணிப்பைகள், நார்ப்பைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

பல்புகளை மாற்றுவோம்

வீட்டில் உள்ள மஞ்சள் குண்டு பல்பு, டியூப் லைட் போன்றவற்றை அகற்றிவிட்டு, எல்.இ.டி., சி.எப்.எல். பல்புகளை பயன்படுத்துங்கள். இதனால் அதிக அளவில் மின்சாரம் சேமிக்கப்படும்.

காகிதத்தின் பயன்பாடு

ஆயிரம் கிலோ காகிதம் தயாரிக்க 17 வளர்ந்த மரங்கள் வெட்டப்படுகின்றன. எனவே காகிதப் பயன்பாட்டைக் குறைப்போம். மரங்களை பாதுகாப்போம்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

மகளிர் சுய உதவிக் குழுக்கள் ICICI வங்கியின் வணிக மேம்பாட்டு முகவர்களாக செயல்படுதல்

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், சுனாமியால் அதிகமாக பாதிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில் பல்வேறு வளர்ச்சி மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

திட்டப் பகுதிகளில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு களில் உறுப்பினராக உள்ள அனைத்து சுய உதவிக் குழுக் களும் வங்கி இணைப்பு பெறும் வகையில் திட்டத்தின் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ICICI வங்கியில் வணிக மேம்பாட்டு முகவர்களாக (Business Development Correspondent) செயல்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது ICICI வங்கி 11 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வணிக மேம்பாட்டு முகவர்களாக (BDC) அனுமதியளித்துள்ளது. கடந்த 24.12.2014 அன்று வங்கியினுடைய உயர் அதிகாரி திரு. ஸ்ரீதர் ரங்கநாதன் அவர்கள் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் அவர்களை, சென்னை தலைமை அலுவலகத்தில் நேரில் சந்தித்து அனுமதி அளிக்கும் ஒப்பந்தக் கடிதத்தை வழங்கினார்.

இதன் மூலம் சுமார் 1500 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வருமானத்தைப் பெருக்க உதவும் வகையில் கடன் கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 14 சதவீத வட்டி விகிதத்தில் ICICI வங்கி கடன் வழங்கவும், சேவைக் கட்டணமாக 2 சதவீதம் கூட்டமைப்புகளுக்கு வருவாய் கிடைக்கவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. மேலும் 20 கூட்டமைப்புகளுக்கு இதேபோன்றே வணிக மேம்பாட்டு முகவர் (BDC) வசதியை அளிப்பதற்கு ICICI வங்கி ஒப்புக் கொண்டுள்ளது. ■

திட்டப் பகுதிகளில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் உறுப்பினராக உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் வங்கி இணைப்பு பெறும் வகையில் திட்டத்தின் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ICICI வங்கியில் வணிக மேம்பாட்டு முகவர்களாக (Business Development Correspondent) செயல்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்
திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ், கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன், தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

காப்பீட்டுத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில், இயற்கை இடர்பாடுகளின் தாக்கம் அதிகமாக உள்ளதால் கடலோர பகுதி வாழ் மக்கள் பல்வேறு வகையான இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். குறிப்பாக புயல், வெள்ளம், சுனாமி, கடலரிப்புகள் மற்றும் கடல் பகுதிகளில் ஏற்படும் விபத்து போன்றவற்றால் அடிக்கடி பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள். இத்தகைய இடர்பாடுகளை எதிர்கொள்ள தேவையான பல்வேறு நடவடிக்கைகளில் காப்பீடு முதன்மையானது.

எனவே திட்டப்பகுதி வாழ் மக்களுக்கு பொது காப்பீட்டு சேவை அளிக்கும் பொருட்டு, குறைந்த காப்பீட்டு கட்டணத் தொகை கொண்ட மருத்துவம், தனிநபர் விபத்து, வீடு, கால்நடைக் காப்பீடு திட்டங்களை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மாவட்ட மீன் விற்பனை சங்கங்களின் சம்மேளனங்கள் மற்றும் தொழிற் சார் கூட்டமைப்புகள் மூலம் பொதுமக்களுக்கு அளித்திட, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்துடன் 01.01.2015 அன்று திட்டத்தின் முதன்மை செயலாளர்/திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களால் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் நிகழ்ச்சியில் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. மிலிந்த் காரட் மற்றும் பொது மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தம் மூலம் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டப் பகுதிகளில் உள்ள பயனாளிகள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மாவட்ட மீன் விற்பனை சங்கங்களின் சம்மேளனங்கள் மற்றும் தொழிற் சார் கூட்டமைப்புகள் மூலம் காப்பீட்டுத் திட்டங்களில் இணைவதால் இடர்பாடுகளினால் ஏற்படும் பொருளாதார இழப்புகளை சிரமம் இன்றி சரி செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. கால்நடை காப்பீட்டு இழப்பீடு பெற கால்நடை மருத்துவரின் அறிக்கை கட்டாயம் பெறப்பட வேண்டும் என்று முன்பு இருந்த நிலையை மாற்றி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சான்றிதழே போதுமானது என நடைமுறை எளிமையாக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மாவட்ட மீன் விற்பனை சங்கங்கள் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களாகவும், மருத்துவ காப்பீட்டு இழப்பீட்டினை மேலாண்மை செய்யும் வகையிலும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் இதர சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான காப்பீட்டு செயலாக்க கையேட்டினை சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. மிலிந்த் காரட் அவர்கள் பெற்றுக் கொண்டார். ■

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மாவட்ட மீன் விற்பனை சங்கங்களின் சம்மேளனங்கள் ஆகியவை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களாகவும், மருத்துவ காப்பீட்டு இழப்பீட்டினை மேலாண்மை செய்யும் வகையிலும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஆபாபில் புடவை வண்ண அச்சுத் தொழில்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் திட்டப் பகுதிகளில் வாழும் சுய உதவிக் குழு உறுப்பினர்களில் தொழில் செய்ய ஆர்வமுள்ளோரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி அளித்து, குறைந்த வட்டியில் நுண் கடன் அளிக்கப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்ட பயனாளிகளில் ஒருவரான ஐ. நஜிமாபீவி தன் அனுபவத்தைக் கூறுகிறார். 'என்னுடைய பெயர் ஐ. நஜிமாபீவி, நான் காஞ்சிபுரம் மாவட்டம் சதுரங்கப்பட்டிணம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். நான் மித் ஆண்டவர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். புடவை பிரிண்டிங் செய்வதில் ஆர்வம் ஏற்பட்டு, சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் பயிற்சி மேற்கொண்டேன். மேலும் எங்கள் குழுவில் உள்ள திருமதி. கீர்த்தனா மற்றும் திருமதி. கலைவாணி ஆகியோருடன் இணைந்து, இத்திட்டத்தின் கீழ் வட்டியில்லா கடனாக ரூ. 1,80,000/– பெற்று, புடவை வண்ண அச்சுத் தொழிலை ஆரம்பித்து இதுநாள் வரை வெற்றிகரமாக நடத்தி வருகிறோம்.

வீட்டில் முடங்கிக் கிடந்த எங்களுக்கு தொழில் துவங்க வட்டியில்லா கடனுதவியும், உற்பத்தி செய்யப்பட்டபொருட்களுக்குத் தேவையான சந்தை வாய்ப்பும் ஏற்படுத்தித் தந்து கொண்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மற்றும் சென்னை போன்ற இடங்களில் சந்தை வாய்ப்பு பெற்றுக் கொடுத்ததோடு, புதிய வியாபார முகவர்களின் அறிமுகமும் எங்களுக்குக் கிடைத்தது. மேலும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் வழிகாட்டுதலால் முதலாளிகளாக தரம் உயர்ந்து குடும்ப வருமானத்தை பெருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுநாள் வரையிலும் ரூ. 3,94,267/– அளவிற்கு உற்பத்தி செய்து, பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ரூ. 2,46,267/– இலாபம் அடைந்து, ரூ. 1,48,000/– கடன் திரும்ப செலுத்தியுள்ளோம்.

வீட்டில் முடங்கிக் கிடந்த எங்களுக்கு தொழில் துவங்க வட்டியில்லா கடனுதவியும், உற்பத்தி செய்யப்பட்டபொருட்களுக்குத் தேவையான சந்தை வாய்ப்பும் ஏற்படுத்தித் தந்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் வழிகாட்டுதலால் தற்போது ஏழை மக்களும் முதலாளிகளாக தரம் உயர்ந்து, தங்களின் குடும்ப வருமானத்தை பெருக்கி வருகின்றனர்.

நாபின்ஸ் நிதி நிறுவனத்தின் உதவியுடன் 2014-15ல் குறுந்தொழில்கள்

அதிக அளவிலான நுண் தொழில்கள் உருவாவதற்கு நாபின்ஸ் நிதி நிறுவனத்துடன் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தால் 6 வருட காலத்திற்குள் 750 நுண் தொழில்கள் உருவாக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் 19.06.2013 அன்று மேற்கொள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில் சென்ற ஆண்டு 144 குறுந்தொழில்கள் ஏற்படுத்தப்பட்டு, நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2014–15 நடப்பாண்டில், 250 நுண் தொழில்கள் உருவாக்க உள்ளதால், NABFINS நிதி நிறுவன அலுவலர்கள், மாவட்ட செயலாக்க அலுவலர்கள் மற்றும் திட்ட ஆலோசகர்கள் கலந்து கொண்டு, குறுந்தொழில் செய்ய முன்வரும் 3லிருந்து 5 பயனாளிகள் வரை கொண்ட கூட்டுப் பொறுப்புக் குழுக்களை நேர்காணல் செய்து அவர்களுக்கு பொருத்தமான குறுந்தொழில்கள் தல ஆய்வு மூலம் அடையாளம் காணப்பட்டன.

பின்னர் குறுந்தொழில்கள் மேற்கொள்வதற்கான திட்ட கருத்துருக்கள் தயார் செய்யப்பட்டன. மேலும் நாபின்ஸ் நிதி நிறுவனத்தின் அலுவலர்கள், கிராமங்களுக்கு நேரடியாக சென்று 207 குறுந் தொழில்களுக்கான குழுக்களை தேர்வு செய்துள்ளனர்.

இதுவரை 207 குறுந்தொழில்களுக்கான விண்ணப்பங்கள் நாபின்ஸ் நிதி நிறுவனத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மீதமுள்ள 43 குறுந் தொழில்களுக்காக ஏற்ற பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு கருத்துருக்கள் தயாரிக்கப்பட்டு உள்ளன.

நடப்பாண்டின் இறுதிக்குள் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் 250 குறுந்தொழில்கள் துவக்கப்பட்டு சுமார் 1250 பயனாளிகள் பயன் பெறுவர். ■

நாபின்ஸ் நிதி நிறுவனத்தின் அலுவலர்கள், கிராமங்களுக்கு நேரடியாக சென்று, ஆய்வு செய்து 207 குறுந் தொழில்களுக்கான குழுக்களை தேர்வு செய்துள்ளனர்.

கடல் பாசி வளர்ப்பு - வருவாயை பெருக்க ஒரு புதிய வழி

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கடலூர் மாவட்ட திட்டப் பகுதிகளில் கடல் பாசி வளர்ப்பு சம்பந்தமாக மீனவர்கள் மற்றும் மகளிர் குழு உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இக்கூட்டங்களில் நிறுவன மேம்பாட்டு மேலாளர் திரு. கனிங்ஸ்டன், முனைவர். பெரியசாமி, (Aquaculture Foundation of India), மாவட்ட செயலாக்க அலுவலர் திருமதி. ஆ. ரெகுபதி மற்றும் 70 பயனாளிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டங்களில் கடல்பாசியினை வளர்க்கும் முறைகள், அதற்கான தேவைகள் போன்றவை குறித்தும், கடல் பாசியானது உணவாகவும் மற்றும் மருத்துவ பொருளாகவும் பயன்படும் விதங்கள் பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டது.

கடல் பாசி வளர்ப்பில் ஒரு பயனாளி ஈடுபட வேண்டுமென்றால் அதற்கு மூலதனமாக ரூபாய் 46,000/– போதுமானது. அதிகபட்சம் 45 நாட்களுக்கு ஒருமுறை கடல்பாசியை அறுவடை செய்யலாம். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரம் கடல் பாசியை பராமரிப்பு செய்ய வேண்டியது அவசியம். கடல் பாசி நன்கு வளர்ந்த பின் அதனை எடுத்து இரண்டு நாட்கள் வரை காய வைக்க வேண்டும்.

பொதுவாக 200 கிலோ பச்சை பாசியினை காய வைத்தால் 22 கிலோ வரை காய்ந்த கடல் பாசி கிடைக்கும். மீனவர்களுக்கும், மகளிர் குழு உறுப்பினர்களுக்கும் கடல்பாசி வளர்ப்பு சிறந்த ஒரு மாற்று தொழிலாக அமையும் என்பது விளக்கி கூறப்பட்டது.

மேலும், கடல் பாசி வளர்ப்பில் ஈடுபடுவதற்கு முன்னர் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் தகவல் தெரிவித்து அவர்களின் முழு ஒத்துழைப்போடு கடல்பாசி வளர்ப்பு தொழில் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

தற்போது கடலூர் மாவட்டத்தில் ஒரு குழுவுக்கு 5 பயனாளிகள் வீதம் 5 குழுக்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அந்தக் குழுக்களின் உறுப்பினர்கள் அனைவரும் கடல்பாசி வளர்ப்பை நேரிடையாக தெரிந்து கொள்ள ஏதுவாக புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அதிராம்பட்டினம் மற்றும் கோட்டைப்பட்டினம் கடற்கரை கிராமங்களுக்கு 12.01.2015 அன்று களப்பயணமாக அழைத்து சென்று கடல்பாசி வளர்ப்பு பற்றி விளக்கமாகக் கூறப்பட்டது.

அடுத்தக்கட்டமாக, இக்குழுக்களுக்கு கடல் பாசி வளர்ப்பு குறித்த தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்கு கடல்பாசி வளர்ப்பு தொழில் செய்யத் தேவையான அனைத்து உதவிகளும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் அளிக்கப்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரைப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகள் மிகவும் உறுதுணையாக உள்ளன. ■

இந்தக் கூட்டங்களில்

கடல் பாசியினை வளர்க்கும் முறைகள், அதற்கான தேவைகள் போன்றவை குறித்தும், கடல் பாசியானது உணவாகவும் மற்றும் மருத்துவ பொருளாகவும் பயன்படும் விதங்கள் பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டது.

ஒரு மரம் தனது 50 வருட ஆயுள் காலத்தில் தரும் பயன்களின் மதிப்பு...

நாம் உயிர் வாழ தேவையான
பிராண வாயு உற்பத்தி – ரூ. 50,00,000/–
காற்றை சுத்தம் செய்யும் பணி–ரூ. 10,50,000/–
மண் அரிப்பைத்
தடுக்கும் பணி – ரூ. 6,40,000/–
மண் வளம் காத்து நிலத்திற்கு
உரமளிப்பது – ரூ. 6,40,000/–
பறவைகளுக்கு பழங்கள்,
உறைவிடம், மலர்கள் போன்றவை
தரும் பணி – ரூ. 5,50,000/–
மொத்த மதிப்பு – ரூ. 78,80,000/–
நீர் நிலைகளைக் காப்போம்!
மரம் வளர்ப்போம்!!
கொட்டப்படும் உணவும், வெட்டப்படும் மரங்களும்
இன்றைய சோகம்... நாளைய பாவம்...

கவிதை – மகளிர் திட்டம்

முற்றம்!

இரவு நேரத்தில் பௌர்ணமி நிலவு போல
நாட்டு நடப்புகள் அனைத்தையும்
நமது வீடு வரை கொண்டு வரும் தோழி நீ!
ரோஜாவின் மென்மையும், வாசனையும் போல
மகளிர் திட்ட செயல்பாடுகளை
உணர வைக்கும் இனியவள் நீ!
துள்ளிக் குதிக்கும் புள்ளி மான் போல
தனது செயல்பாடுகளில் குதித்து முன்னேறும்
சுய உதவிக் குழுவின் மகளிரை
உற்சாகப்படுத்தும் தென்றல் நீ!
முற்றமே ...
தோழியாக இனியவளாக தென்றலாக
நீ எப்போதும் வாழ்க! வளர்க!!

மல்லிகா நடராஜன்
குறிஞ்சி மகளிர் சுய உதவிக் குழு
காளியாபுரம், கோவை மாவட்டம்.

ஈரோடு

இயக்க செயல்பாடுகள் ஆய்வு

ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மொடக்குறிச்சி விளக்கேத்தி கிராம வறுமை ஒழிப்பு சங்கம் சார்பில், திருமதி சரஸ்வதி மற்றும் திருமதி லட்சுமி ஆகியோருக்கு தனிநபர் கடனுதவியாக தலா ரூ. 10000/– வழங்கப்பட்டது. மேலும் பெருந்துறை துடுப்பதி கிராம ஊராட்சியில் மக்கள் நிலை ஆய்வுப் பணியில் சமூக வரைபட விபரங்களை ஆய்வு செய்த மேலாண்மை இயக்குநர் அவர்கள் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியின் போது, கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா, ஈரோடு மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திருமதி. பெ. ரேணுகாதேவி மற்றும் நீலகிரி மாவட்ட மகளிர் திட்ட அலுவலர், உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர். ■



மானூர் ஊராட்சி ஒன்றியம் கோடக நல்லூர் பகுதிக்குட்பட்ட கோடகநல்லூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு 2010ஆம் ஆண்டு வங்கிப் பெருங்கடனாக ரூபாய் 19 இலட்சம் வழங்கப்பட்டது.

வங்கிப் பெருங்கடன்

திருநெல்வேலி மாவட்டத்தில் மானூர், குருவிகுளம், வாசுதேவநல்லூர் மற்றும் மேலநீலித நல்லூர் ஆகிய ஒன்றியங்களில் உள்ள 156 ஊராட்சிகளில் புதுவாழ்வு திட்டம் செயல்பட்டு வருகின்றது. மானூர் ஊராட்சி ஒன்றியம் கோடக நல்லூர் பகுதிக்குட்பட்ட கோடகநல்லூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு 2010ஆம் ஆண்டு வங்கிப் பெருங்கடனாக ரூபாய் 19 இலட்சம் வழங்கப்பட்டது. கார்கோடகன் பால் உற்பத்தி தொழில் குழுவிற்கு ரூபாய் 38 லட்சம் வழங்கப்பட்டது. 15.12.2014 அன்று நடைபெற்ற விழாவில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் முனைவர் மு. கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள், கோடகநல்லூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக ரூபாய் 44,90,000/- வழங்கினார். இந்தத் தொகை 17 குழுக்களைச் சேர்ந்த 214 உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது. ■

சான்றிதழ் படிப்பிற்கான புத்தகங்கள் மற்றும் அடையாள அட்டை வழங்குதல்

புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் 13.12.2014 அன்று கடலூர் மாவட்டத்தில் திட்ட அலுவலர்களின் பணியினை ஆய்வு செய்தார்.

அப்போது கிராம வறுமை ஒழிப்பு சங்க கணக்காளர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மூலம் தொலைதூர கல்வித் திட்டம் மூலம் ஒரு வருட நூலக அறிவியல் சான்றிதழ் படிப்பிற்கான (CLIS) பாட புத்தகங்கள் மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றை கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள் வழங்கி, 'கிராம வறுமை ஒழிப்பு சங்க கணக்காளர்கள் இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி, நல்ல முறையில் தேர்வு எழுதி வெற்றி பெற்று, மேலும் சிறப்பாக பணியாற்ற வேண்டும்' என்று அறிவுரை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியின் போது மாநில நுண்நிதி திட்ட வல்லுநர் திருமதி. சரஸ்வதி கணேசன், மாவட்ட திட்ட மேலாளர் திரு. ப. கருப்பையா மற்றும் உதவித் திட்ட மேலாளர் திரு. பா. மனுநீதிசோழன் ஆகியோர் உடனிருந்தனர். ■

கிராம வறுமை ஒழிப்பு சங்க கணக்காளர்கள் நல்ல முறையில் தேர்வு எழுதி வெற்றி பெற்று, மேலும் சிறப்பாக பணியாற்ற வேண்டும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
புது வாழ்வு திட்டம்

புதுவாழ்வு திட்டத்தின் மூலம் கிடைத்த வேலை வாய்ப்பு

மதுரை மாவட்டம், புளியம்பட்டி பஞ்சாயத்து, ஜெகநாதன்பட்டி கிராமத்தில் வசித்து வருபவர் நாகராஜன், இவரின் பெற்றோர் கூலி வேலை செய்து வருகின்றனர். ஐ.டி.ஐ. படித்து விட்டு வேலைவாய்ப்பு இல்லாமல் இருந்து வந்த நாகராஜன், புதுவாழ்வு திட்டம் மூலம் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு, சி.என்.சி. புரோக்கிராமிங் ஆப் ஆபரேசன் என்ற தொழில் பயிற்சியை ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் உள்ள டி.எம்.டபிள்யூ. சி.என்.சி. சென்டரில் பெற்றார். பயிற்சிக்குப் பின்னர் கோவையில் உள்ள பாரத் ஆட்டோ மெஷின் என்ற கம்பெனியில் பணி வாய்ப்பு பெற்ற நாகராஜன், தற்போது மாதந்தோறும் ரூ. 9,000/– ஊதியம் பெற்று வருகிறார். ■

புதுவாழ்வு-திட்டம்!

ஏழை எளியோருக்கான
மறுவாழ்வு திட்டமாம்
நமது புதுவாழ்வு திட்டம்!

எத்தனையோ குழு வங்கி கணக்குகள் துவங்கி
வாழ்வாதாரத்திற்கு துணை நின்ற திட்டமாம்
நம் புதுவாழ்வு திட்டம்!

நாவில் தித்திக்கும் அமுதத்தைப் போல
வாழ்வுத் தித்திக்க கூட்டமைப்பு கடன்கள்!
மாற்றுத் திறனாளிகளுக்கும் நலிவுற்றோருக்கும்
தனி நபர் கடன் உதவித் தொகைகள்!

பள்ளிக்கும் போனதில்லை
படிக்கவும் தெரியவில்லை என்று
சொல்லும் பெண்களுக்கு வந்த திட்டம்
கற்கும் பாரதத் திட்டம்!

வாழ்வில் வளம் பெற, கிராமம் செழித்திட
தொடர வேண்டும் பணிகள்
அதை நிறைவேற்ற வந்த புதுவாழ்வு திட்டம்
மேலும் மேலும் வளர்க...!!

எஸ். அன்னபூரணி
ஸ்ரீ விக்னேஸ்வரா மகளிர் சுய உதவிக் குழு,
புதுக்காலனி, அங்கலக்குறிச்சி,
பொள்ளாச்சி, கோவை மாவட்டம்

விழுப்புரம்

புதுவாழ்வு திட்ட இயக்குநர் ஆய்வு

விழுப்புரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

முதல் நிகழ்வாக ஆரோவில்லில் உள்ள நிலையான வாழ்வாதார நிறுவனத்தில் (Sustainable Livelihood Institution) நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு திட்ட இயக்குநர் அவர்கள் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் நிலையான வாழ்வாதார நிறுவனத்தின் அலுவலர்கள் திரு. ஜோஸ் புரூக்ஸ், திரு. பேபியன், திருமதி. மோனா மற்றும் திரு. ராம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் திட்ட இயக்குநர் அவர்கள், சின்னபாபுசமுத்திரம் ஊராட்சியில் கள ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, ஒத்த தொழில் குழு ஆகியவற்றின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்து மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கினார்.

இப்பகுதியில் திறன் வளர்ப்பு பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகள், கிராம வறுமை ஒழிப்பு சங்கம், கூட்டமைப்பு மற்றும் ஒத்தத் தொழில் குழுக்களின் உறுப்பினர்கள் மேற்கொண்டு வரும் தொழில்கள், கடன் இணைப்பு குறித்த விபரங்கள், மகமையின் செயல்பாடுகள் ஆகியவை திட்ட இயக்குநர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் தனிநபர் கடனுதவி பெற்று சுய தொழில் மேற்கொண்டு வரும் நபர்களையும், திறன் பயிற்சி பெற்று பணி வாய்ப்பு பெற்றவர்களையும் சந்தித்து அவர்களின் முன்னேற்றம் குறித்த விபரங்களும் அறிந்து கொள்ளப்பட்டது.

கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, ஒத்த தொழில் குழு ஆகியவற்றின் செயல் பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்து மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட மேலாளர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

தருமபுரி கறவை மாடுகள் வழங்கும் விழா

புதுவாழ்வு திட்டம்

கிராமப் பகுதியில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி, அவர்களின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம், ஆலாபுரம் கிராமத்தில் 14.01.2015 அன்று புதுவாழ்வுத் திட்டத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 71 பயனாளிகளுக்கு 25 இலட்சம் மதிப்பிலான கறவை மாடுகளை மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. பி. பழனியப்பன் அவர்கள் வழங்கினார்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், இப்பகுதியில் உள்ள குக்கிராமங்களான மருக்கலாம்பட்டி, அம்மாப்பாளையம், நடூர், ஜீவா நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 71 பயனாளிகளுக்கு கறவை மாடுகளும், 3 சுய உதவிக்குழுக்களுக்கு விவசாயம் சார்ந்த தொழில் செய்திட தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் காசோலையும் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. பி. பழனியப்பன் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் திருமதி. சகிலா, மாவட்ட புதுவாழ்வுத் திட்ட மேலாளர் திரு. நாராயணன், கால்நடைத்துறை உதவி இயக்குநர் டாக்டர். அர்த்தனாரி மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பால்வள சங்க உறுப்பினர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

விருதுநகர்

ஒளிவிளக்கு ஏற்றிய புதுவாழ்வு திட்டம்

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் ஒன்றியத்தில் உள்ள சத்திரப்பட்டி கிராமத்தில் வசிக்கும் கருப்பாயி ஒரு மாற்றுத் திறனாளி ஆவார். இவரின் கணவர் மற்றும் மகள் ஆகியோரும் மாற்றுத் திறனாளிகளே. அன்றாட வாழ்க்கையை நடத்தவே மிகவும் சிரமப்பட்டு வந்தார் கருப்பாயி. இந்நிலையில் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் இணைந்து, தனிநபர் கடனாக ரூபாய் 20,000/- பெற்று, சிறிய பெட்டிக் கடை ஒன்றினை ஆரம்பித்தார். தற்போது அந்தப் பெட்டிக் கடை மூலம் தினசரி ரூ. 150/-வருவாய் பெற்று வரும் கருப்பாயி, தனது வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்திய புதுவாழ்வு திட்டத்திற்கும், கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறார். ■

மகளிரின் முகவரியாய் முற்றம்...!

முற்றம் இதழ் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	- ரூ. 100/-
இரண்டு ஆண்டு சந்தா	- ரூ. 150/-
மூன்று ஆண்டு சந்தா	- ரூ. 250/-
நான்கு ஆண்டு சந்தா	- ரூ. 300/-
ஆயுள் சந்தா	- ரூ. 600/-
புரவலர் கட்டணம்	- ரூ. 15,000/-

சந்தாத் தொகையை 'முற்றம்' என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தக்க முறையில் வங்கி வரைவோலையாக மட்டுமே அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையுடன், சந்தாதாரரின் பெயர், க/பெ. (அ) த/பெ., குழுவின் பெயர், வீட்டு எண், தெரு எண், கிராமத்தின் பெயர், தாலுக்கா பெயர், மாவட்டத்தின் பெயர் ஆகியவற்றுடன் அஞ்சல் குறியீட்டு எண்ணையும் (பின்கோடு எண்) தவறாமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். முற்றம் சந்தாக்களுக்குரிய புத்தகம் அந்தந்த நபருக்கு அனுப்ப வேண்டுமா? அல்லது மொத்தமாக எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதை தெளிவாகக் கடிதத்தில் குறிப்பிட வேண்டும். ■

தேனி

மதிப்புக் கூட்டப்பட்ட சிறுதானியப் பொருட்கள் விற்பனை

தேனி மாவட்ட புதுவாழ்வு திட்டம் சார்பில், ஆண்டிப்பட்டி ஒன்றியம், கன்னியப்பபிள்ளைபட்டி ஊராட்சியில் இயற்கை விவசாயம் மேற்கொள்ளும் ஒத்தத் தொழில் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்ட மதிப்புக் கூட்டப்பட்ட சிறுதானிய பொருட்களின் விற்பனை தொடக்க விழா 24.12.2014 அன்று சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கத்தமிழ்ச் செல்வன், மாவட்ட ஆட்சியர் திரு. கே. எஸ். பழனிச்சாமி, இ.ஆ.ப., மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. எஸ். கழுகாசலமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட உதவித் திட்ட மேலாளர்கள் திரு. எஸ். பாலசுப்பிரமணியன், திரு. வி. அன்புராஜா, அணித்தலைவர் திரு. சி. சேதுராமலிங்கம் மற்றும் மகமை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

சிவகங்கை

மாற்றம் தந்த திட்டம்

சிவகங்கையில் வசித்து வரும் திருமதி. தேவி, புதுவாழ்வு திட்டத்தின் மூலம் தான் பெற்றுள்ள பொருளாதார வளர்ச்சி குறித்து உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார். 'என் பெயர் தேவி, எனது கணவர் பெயர் ஆறுமுகம், எங்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். எனது கணவருக்கு கிடைக்கும் குறைந்த ஊதியத்தில் மிகவும் சிரமத்துடன் வாழ்க்கையை நடத்தி வந்தேன். எனக்கு வேலைக்கு சென்று சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், குடும்ப சூழ்நிலையால் அந்த எண்ணம் ஈடேறவில்லை.

இந்நிலையில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் பெண்களுக்கு இலவச தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகிறது என்பதை அறிந்து, எனக்கும் தொழிற்பயிற்சி வேண்டி விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, எனக்கு அழகுக் கலை பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சிக்குப் பின்னர் சிறிய அளவில் அழகு நிலையம் ஒன்றை துவக்கினேன். ஆரம்பத்தில் மிகக் குறைந்த அளவே ஆட்கள் வந்தனர். பின்னர் நாளடைவில் அதிக அளவில் ஆட்கள் வர துவங்கினர். தற்போது மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று, எனது குடும்பத்தின் வறுமையை போக்கி வருகிறேன். என் வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்திய புதுவாழ்வு திட்டத்திற்கு நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ■

காஞ்சிபுரம்

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி நேரடிக் கடன்

கிராமப்புறங்களில் உள்ள ஏழை மற்றும் மிகவும் எழைகளின் வறுமையைக்குறைப்பதற்காகபுதுவாழ்வுதிட்டம்செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழ்மை நிலையில் உள்ள பெண்களை குழுக்களாக ஒன்றிணைத்து, அவர்களுக்கு கூட்டமைப்புகள் மூலம் அமுதசுரபி நிதி வழங்குவதுடன், வங்கி நேரடிக் கடனும் பெற்றுத் தரப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், ஆத்தூர் இந்தியன் வங்கிக் கிளை மூலம் 72 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 1,31,00,000/- நேரடிக் கடன் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் முனைவர் வி. கே. சண்முகம், இ.ஆ.ப., மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர், இந்தியன் வங்கியின் மண்டல மேலாளர், முன்னோடி வங்கி மேலாளர் திரு. டோமனிக் சேவியர், INSETI இயக்குநர் திரு. பத்ரி நாராயணன், ஆத்தூர் இந்தியன் வங்கி மேலாளர் திருமதி. சரளா, திரு. ஏகாம்பரம் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

வாழ்வாதார குழு மற்றும் சுய உதவிக் குழுக்கள், மாவட்ட மகமை ஆகியவற்றின் செயல்பாடுகள், வங்கி இணைப்பு பெற்றுள்ளவர்கள், சுய தொழில் மேற்கொண்டுள்ளவர்கள் போன்றவற்றின் விபரங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

புதுவாழ்வு திட்ட செயல்பாடுகள் ஆய்வு

திருவாரூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் 28.12.2014 மற்றும் 29.12.2014 ஆகிய நாட்களில் ஆய்வு செய்தார். ஆய்வின் முதல் நாளன்று பட்டுக்கோட்டையில் 15 மாவட்டங்களை சேர்ந்த மகமையின் வாழ்வாதார அலகின் செயல்பாடுகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டார். பின்னர் கோட்டூர் தோட்டம் ஊராட்சி மற்றும் எண்கன் ஊராட்சி ஆகியவற்றில் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், கூட்டமைப்புகள் மற்றும் மாவட்ட மகமை ஆகியவற்றின் செயல்பாடுகள் போன்றவற்றின் விபரங்களை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது திருவாரூர் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

திட்ட செயல்பாடுகள் ஆய்வு

மாற்றுத் திறனாளி உறுப்பினர்களையும், தொழிற் திறன் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பு பெற்றவர்களையும் சந்தித்து, அவர்களின் வாழ்வாதார வளர்ச்சி குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள், 07.01.2015 மற்றும் 08.01.2015 ஆகிய நாட்களில் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தந்து அம்மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சி. செவத்தான் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். மேல்நாச்சிப்பட்டு மற்றும் சின்ன கோளபாடி ஆகிய ஊராட்சிகளில் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களில் கள ஆய்வு மேற்கொண்ட கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் உறுப்பினர்கள் விபரம், அவர்கள் பெற்றுள்ள கடன், மேற்கொண்டு வரும் தொழில்கள் போன்றவை குறித்த விபரங்களை கேட்டறிந்தார். ஜெயம் பால் உற்பத்தியாளர் ஒத்தத் தொழில் குழு மற்றும் பூங்காவனத்தம்மன் பால் உற்பத்தியாளர் ஒத்தத் தொழில் குழு அகியவற்றின் செயல்பாடுகளையும் பார்வையிட்டு, பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார். ■

உங்கள் கால்நடைகளுக்கு சிறு உபாதைகள் ஏற்படும்போது உங்கள் ஊரிலேயே கிடைக்கும் இயற்கை பொருட்களைக் கொண்டு, உபாதைகளைத் தீர்க்க முடியும். சில சிறிய உபாதைகளுக்கான இயற்கை வைத்தியம் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

கழிச்சல்

மாடுகள், ஆடுகள் போன்றவற்றிற்கு கழிச்சல் ஏற்படும் போது, கீழ்கண்ட கலவையினைப் பயன்படுத்தலாம்.

தேவையானப் பொருட்கள் :

முதல் கலவை

சின்ன சீரகம், கசகசா, வெந்தயம் போன்றவை தலா 15 கிராம், மிளகு – 5 எண்ணிக்கை, மஞ்சள், பெருங்காயம் தலா 5 கிராம்,

இரண்டாம் கலவை

சிறிய வெங்காயம் 10 கிராம், பூண்டு 6 பல், புளி – 200 கிராம், பனை வெல்லாம் – 250 கிராம்

மேற்கண்ட இரு கலவையையும் கலந்து, சிறு சிறு உருண்டைகளாக்கி, கல் உப்பினை சேர்த்து, கால்நடைகளின் நாக்கில் சொற சொறப்பான மேல் பகுதியில் தேய்த்த வண்ணம் செலுத்த வேண்டும்.

காய்ச்சல்

மாடுகள் மற்றும் ஆடுகளின் காதுகளையும், வாலின் மேல் பகுதியையும் உள்ளங்கையில் வைத்துப் பார்க்கும் போது கால்நடைகளின் உடல் வெப்ப நிலையினை அறியலாம். காய்ச்சலின் போது மாடுகள் சோர்ந்து, தீனி எடுக்காமல் காணப்படும். இதற்குப் பின்வரும் கலவையினைப் பயன்படுத்தலாம்.

தேவையானப் பொருட்கள் :

நில வேம்பு இலை – 2 கைப்பிடி, சின்ன வெங்காயம் – 50 கிராம், சீரகம் – 20 கிராம், மிளகு – 20 எண்ணிக்கை, மஞ்சள் – 1 தேக்கரண்டி, வெற்றிலை – 10 இலை, பிரண்டை 10 கொத்து

மிளகு மற்றும் சீரகத்தை இடித்த பின் மற்ற பொருட்களை சேர்த்து அரைத்து, இந்தக் கலவையினை, நான்கு வெள்ளாடுகள் அல்லது நான்கு செம்மறி ஆடுகள், ஒரு மாடு அல்லது இரண்டு கன்றுகளுக்கு கொடுக்கலாம்.

மடி வீக்க நோய்

தேவையானப் பொருட்கள் :

சோற்றுக் காற்றாழை – 50 கிராம், மஞ்சள் பொடி – 10 கிராம், சுண்ணாம்பு – 1 கிராம்.

மேற்கண்ட பொருட்களை ஒன்றாக சேர்த்து நன்கு அரைத்து வெதுவெதுப்பான நீரில் கலந்து, அரை திட அளவில் செய்து கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட மடியினை பொட்டாசியம் பர்மாங் கனேட் கலந்த தண்ணீரால் நன்றாகக் கழுவிய பின்பு, சிறிதளவு பால் பீய்ச்சிய பின்பு மடியின் மீது பூச வேண்டும்.

இவ்வகை இயற்கைப் பொருட்களைக் கொண்டு, முதலுதவியாக நோயினை முற்ற விடாமல் தடுக்கலாம். பின்னர், கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி சிகிச்சை அளிக்க வேண்டும். ■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (60,200 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

திறந்தவெளியில் மலம் கழிக்க போகும் பெண்களுக்குப் பலவித இடையூறுகள் ஏற்படுகின்றன. மற்றவர்களின் தவறான பார்வை, கேலி கிண்டலுக்கு ஆளாவதுடன் பாம்பு, பூச்சிகள் கடிக்கும் ஆபத்தும் உண்டாகிறது. போற்றி பாதுக்காக்கப் பட வேண்டிய பெண்களை, நாமே இப்படி திறந்தவெளியில் மலம் கழிக்க அனுப்பலாமா? வீட்டில் கழிவறை கட்டுங்கள். பெண்களின் மரியாதையைக் காக்கவும், பாதுகாக்கவும் இது ஒன்றுதான் வழி.

கழிவறை உபயோகமே, வாழ்க்கைக்கு கவுரவம்.

unicef
unite for children

வெளியில மலம் போனா சீச்சீ சொல்லப்பா!

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication 22.01.2015

நிதி உதவி வழிவகைகள்...
திறக்கப்படும் புதிய பாதைகள்

- அணுகும் வசதி இல்லாதவர்களுக்கும் கிளையில்லாமலே வங்கி வசதி
- நடமாடும் வங்கிச் சேவை வசதி
- வங்கிச் சேவை மையங்கள்
- கைரேகை மூலம் செயல்படும் காசாளும் இயந்திரங்கள்
- சுயஉதவிக் குழுக்களுக்கான சிறப்பு நிதியுதவிக் கிளைகள்
- நிதிசார் கல்வி மற்றும் கடன் ஆலோசனை மையம் (FLCC)
- இந்தியன் வங்கி சுயவேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனம் (INDSETI)
- நுண் காப்பீட்டுத் திட்டம்

ஒட்டுமொத்த வளர்ச்சிப் பாதையில்.... மலர்கின்ற புன்னகை...

மேலும் விவரங்களுக்கு: அருகில் உள்ள இந்தியன் வங்கி கிளையை தொடர்பு கொள்ளவும்.

கார்பரேட் அலுவலகம்:
254-260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
மின்னஞ்சல்: indmail@indianbank.co.in
கட்டணமில்லா தொலைபேசி: 1800 425 00 000
இணையதளம்: www.indianbank.in

इंडियन बैंक
இந்தியன் வங்கி
உங்கள் தொழில்நுட்பநேய வங்கி